விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 15 வெள்ளிக்கிழமை (27.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 070

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# போர்க்குற்ற விசாரணை அறிக்கை

# ஒத்திவைத்தமை நியாயமானதே!

## ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

(ஜெனிவா)

**இலங்கை தொடர்பான போர்க்குற்ற விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது நியாயமான காரணங்களின் அடிப்படையிலேயே ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

ஐ.நா மனித உரிமை பேரவையின் 28-வது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது ஒத்தி வைக்கப்பட்டமை குறித்து எழுந்து வரும் எதிர்ப்புகளுக்கு பதிலளிக்கும் போதே ஐ.நாவுக்கான மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் யோகிம் ரகர் ஜகத் இதனை கூறியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தின் காஸா பள்ளத்தாக்கில் இடம் பெற்ற மோதல்கள் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் அந்த பதவியில் இருந்து விலகியமை, இலங்கையின் மோதல்கள் சம்பந்தமான அறிக்கை முக்கியமானது என்பதுடன் தர்க்க காரணங்களின் அடிப்படையில் அறிக்கையை ஒத்திவைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டது. இலங்கை சம்பந்தமான போர்க்

23ஆம் பக்கம் பார்க்க....



# இலங்கையில் பாரிய மாற்றம்

## அமெரிக்கா மகிழ்ச்சி

(வாஷிங்டன்)

இலங்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவில் 2016ஆம் ஆண்டுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் குறிப்பிடுகையில், இதுவரை ஜனநாயகம் இல்லாத, பிரச்சினைக்குரிய பல நாடுகளில் ஜனநாயகத்தை இப்போது காண முடிகிறது.

இலங்கையிலும், ஏனைய நாடுகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாற்றங்களை ஏற்படுத்தும் மகத்

23ஆம் பக்கம் பார்க்க....

## 'ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்'



(கொழும்பு)

ஊழல், மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்டத்தை செயல்படுத்துவதை தாமதித்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் இந்த ஆர்ப்பாட்டம் நடை

23ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ தளபதியுடன் அமைச்சர் பேச்சு

(கொழும்பு)

இராணுவத் தளபதி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவுடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார்.

புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள லெப்டினனட் ஜெனரல் கிருஸாந்த டி சில்வா நேற்று பாது

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் தங்கி நிற்க கமலுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் யாழ்ப்பாணத்தில் தங்கி

23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை வரும் பெல்ட்மன் கூட்டமைப்புடன் முதல் பேச்சு

(கொழும்பு)


இலங்கைக்கு நாளை வருகை தரும் ஐக்கிய நாடுகள் சபையின் உப செயலாளரும் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான ஜெப்ரி பெல்ட்மன், இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவுள்ளார். இதனை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பு நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொழும்பு சினமன் ரெட் ஹோட்டலில் நடைபெறவுள்ளது என்று சம்பந்தன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விசாரணை அறிக்கையை செப்டெம்பர் மாதம் வரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை பிற்போட்டுள்ளது. இதனைக் கண்டித்து புலத்திலும் ஈழத்திலும் கண்டனப் போராட்டங்கள்

23ஆம் பக்கம் பார்க்க....

# இறுதிப்போரின் போது நடந்த உண்மையை கண்டறிவது அவசியம்



## சோபித தேரர் வலிறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது என்ன இடம்பெற்றது என்பது தொடர்பில் உண்மைகள் கண்டறியப்படுவது அவசியம் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும், கோட்டை நாகவிகாரையின் விகாராதிபதியுமான மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறிவதன் மூலமாக இவ்விடயத்தில் தெளிவைப் பெற்றுக் கொள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

27.02.2015 முதல் 03.03.2015 வரை 4 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-165)

## வாழ்க்கையில் உயரப் பறந்திட...



எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத்தவர் ஆகும் வாய்ப்பு உங்களுக்கும் கிடைத்துள்ளது.

- இளைஞர் யுவதிகள்
- இல்லத்தரசிகள்
- ஓய்வுபெற்றவர்கள்

**கல்வித் தகைமை:-A/L**

**தொடர்பு:-**

**0777121868**

(9628)


## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை வட்டாரம்-08 ஆதன இலக்கம்-50, மூத்தவிநாயகர் வீதி, ஆனைக்கோட்டை.**

வட்டாரம் 08 மூத்தவிநாயகர் வீதி, ஆதன இலக்கம் 50 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை "தவசிவளவும் மணற்பிட்டியும் மணற்பிட்டி கொள்விலையும் மடத்தடி பிராமணன் வளவும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 1.7 கொண்ட இவ்வாதனமானது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லத்துரை பெண் அன்னலட்சுமி ஆகிய இவர்களால் சீதன உறுதி மூலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த றசீசன் பெண் சர்மிளா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 11490 ஆம் இலக்க 2011.09.17 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "தவசிவளவும் மணற்பிட்டியும் மணற்பிட்டி கொள்விலையும் மடத்தடி பிராமணன் வளவும்" நிலப்பரப்பு 01 குளி 1.7 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் றசீசன் பெண் சர்மிளா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

(9626)

# தொழில்நுட்ப ஆய்வுகூட கட்டிடம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் நிதி உதவியில் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையில் 7 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடம் நேற்று வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு இராஜாங்க கல்வி அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வு பாடசாலை முதல்வர் செல்வி கிறேஸ் தேவயாளினி தேவராசா தலைமையில் இடம்பெற்றது. முதலில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு தேசியக் கொடி, மங்கல விளக்கேற்றப்பட்டு உத்தியோகபூர்வமாக தொழிநுட்ப ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு மகளிர் விவகார பிரதி அமைச்சரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன், வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குரு குலராசா, கல்வி அமைச்சின் செயலாளர் டக்ளஸ் நாணயக்கார, தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளர் எஸ். முரளிதரன், கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் எஸ். ரெங்கராஜ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ-60)

# பிரதமராகும் தகுதியுண்டு

(கொழும்பு)

மகிந்தவின் ஆட்சி காலத்திலும், தற்போதும் தனக்கு பிரதமராகும் தகுதி உள்ளது என எதிர் கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி சேவையின் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிதாக அரசியலுக்குள் நுழையும் அனைவரும் தம்மால் சிறந்த தலைமைத்துவத்தை வழங்க முடியும் எனும் எதிர் பார்ப்புடன் வருகின்றபோதிலும் எல்லோருக்கும் அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை.

மகிந்தவின் ஆட்சியிலும் சரி, தற்போதைய ஆட்சியிலும் சரி பிரதமராகும் அனைத்து தகுதிகளும் தனக்கு உள்ளது.

அத்துடன் ஒவ்வொரு அரசியல் வாதியும் உயர் நிலைகளை அடைய வேண்டும் எனும் எதிர் பார்ப்புடன் தான் அரசியலில் இருக்கின்றார்கள் எனவும் எதிர்க்கட்சி தலைவர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக் காட்டியுள்ளார்.(எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னு வயிரம்மா

ஆவரங்கால் மேற்கு, இந்து இளைஞர் வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னு வயிரம்மா நேற்று (26.02.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுவின் அன்பு மனைவியும், நந்தாவதி (இத்தாலி), சந்திரவதனி, சாந்தினி, கஜேந்திரன் (சமாதான நீதவான், மந்திகை ஆதார வைத்தியசாலை இயந்திர பிரிவு), மகேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தம்பிராசர் (காந்தி, இத்தாலி), சந்திரன் (கீறோ, ரிப்ரொப் சூபலஸ் கொழும்பு), குணசிங்கராசா (கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்), அருட்பராசக்தி (அரசினர் வைத்தியசாலை-அச்சுவேலி, ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுஜீவன (இத்தாலி), தர்சிகா (இத்தாலி), ஆனந்தி, திவாஜினி, தனுவந்தி, கஜானன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27.02.2015) வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்து இளைஞர் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

*தகவல்:பொன். கஜேந்திரன் (மகன்)*
*சமாதான நீதவான்*
*தொ.பே:-0776159815*

(9631)


### வட மாகாண பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்

**3 இடங்களில் நடைபெற உள்ளன.**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு யாழ்.நகர், BCS Collage மன்னார், Edison கிளிநொச்சி ஆகிய இடங்களில் திரு.தவசேகரின் வழிகாட்டலில் நடைபெறவுள்ளது.

**தொ.பே:-0766883394**

(சி-168)

### வினைத்திறன், தடைதாண்டல் பரீட்சை வகுப்புக்கள்

**அரச முகாமைத்துவ உதவியாளர்** II, III

சனி-3.00க்கு

**அதிபர் சேவை**

சனி, ஞாயிறு-1.00

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி. கொமர்ஷல் வங்கி அருகில்)

(சி-168)

**May 9th யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.**



**IELTS™**

English for International Opportunity

### Speciality of our course

- Special attention to Advanced Grammar Vocabulary
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

**British Council IELTS Provincial Partner of the Year - 2014**



**வகுப்புக்கள் 28.02.2015ல் ஆரம்பம்**

(C-154)



**Course Schedule**

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 8.30-10.30, 5.00 - 700 |

**BRITISH COLLEGE OF ENGLISH**

No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 , 077 880 3887


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டைக்காடு கடற்பகுதியில்

# இந்திய - இலங்கை மீனவர்கள் மோதல்

**வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் இந்திய மீனவர்களும் கட்டைக்காடு பகுதி மீனவர்களும் பரஸ்பரம் கற்கள் போத்தல்களை வீசி எறிந்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதில் வடமராட்சி கிழக்குப்பகுதி மீனவர்கள் 5 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.**

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் இந் திய இழுவை படகுகளின் தொல்லை கட்டுக் கடங்காத முறையில் அதிகரித்து வருவதாக கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மை நாட்களாக இந்தக் கடல் பிரதேசம் இங்கும் பல நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப்படகுகள் தொழிலினை மேற்கொண்டு வருகின்றன. இதனால் வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலாளர்கள் பாரிய இன்னல்களையும் தொழில் நட்டங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் ஆழிய வளை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு ஆகிய கிராம ங்களின் கடற்கரையில் நின்று இந்திய . இழுவைபடகுகளையும் தொழிலாளர்களையும் பார்க்கக் கூடிய அளவுதூரத்தில் இந்திய இழுவை படகுகள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

இவ்வாறு தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய இழுவைபட குகளை விரட்டியடிப்பதற்காக கட்டைக்காடு சென். மேரிஸ் கடற்றொழிலாளர்கள் சுமார் 15 பேர் தமது மீன்பிடி படகுகளில் இந்திய இழவை படகுகளை நோக்கிப் புறப்பட்டனர்.

அங்கு சென்ற தொழிலாளர்கள் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அவ்விடத்தில் 30 இற்கும் மேற்பட்ட இந்தியப் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபட்ட போதும் ஓரிரு இந்திய இழுவைப் படகுகளை கடற்கரைக்கு கொண்டு வர அவர்கள் முயற்சித்த போது அங்கு கடும் வாக்குவாதம் இடம் பெற்றது.

இந்த முயற்சியின் போது இந்திய மீனவர்களும் வடமராட்சி கிழக்கு மீனவர்களும் பரஸ்பரம் கற்கள் , ஈயக்குண்டு , போத்தல் , தடிகள் என்பவற்றால் வீசி எறிந்து தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 5 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இந்திய மீனவர்கள் பெரிய படகுகளில் வந்ததனால் வடமராட்சி கிழக்கு மீனவர்களால் அவர்களை எதிர் கொள்ள முடியவில்லை.

இதேவேளை இச்சம்பவம் குறித்து மீனவ சமாசங்கள், கடற்படை மற்றும் வடமாகாண மீன்பிடி அமைச்சு என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-64)


திருமண தேவைகளுக்கான கார்



வாடகைக்கு விடப்படும்

புத்தம் புதிய Honda vazal

வெள்ளை நிறக் கார்

திருமண தேவைகளுக்கு

வாடகைக்கு

விடப்படும்.

தொடர்புகளுக்கு:-

0773747825, 0212228984

(C-222)


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

**வெளிவாரி அடிப்படையில் வேலையாட்களுக்கான**

**கூறுவிலை கோரல்**

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் எல்லைக்குள் குடிநீரில் கழிவு ஒயில் கலந்த பிரதேச மக்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்வதற்கான பின்வரும் ஆளணியை வெளிவாரி அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய கேள்விகள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. சாரதி -02
2. தொழிலாளி- 02

| | |
|---|---|
| கேள்வி விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி | 27.02.2015 |
| விண்ணப்ப முடிவுத்திகதி | 10.03.2015 |
| விண்ணப்பம் ஏற்கும் முடிவுத்திகதி | 11.03.2015 |

ஆர்வமுள்ள கேள்விதாரர் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம எனும் முகவரியில் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கமுடியும். மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தியாகராசா தியாகச்சந்திரன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-166)


சேவை நலன் பாராட்டு



திரு.சின்னத்துரை அற்புதகுமார்

B.Sc PG.Dip.in . Edu SLTS-I

சேவை விபரம்

17.07.1987-10.03.1992- தி/ சண்முகா இந்துக் கல்லூரி, திருகோணமலை
11.03.1992- 01.11.1992- க/ புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம், கண்டி
02.11.1992- 27.04.2011- க/ கதிரேசன் மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி
28.04.2011- 25.01.2015- யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

எமது கல்லூரியில் சிறந்த கணித ஆசானாக சேவையாற்றி 25.01.2015 இல் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியரை சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல இறையருளை நாடி ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரிச் சமூகம்.

(9621)


## இன்றைய இராசி பலன்

**27.02.2015**

மாசி 15, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
நவமி பிற்பகல் 4.11 மணிவரை
மிருகசிரிடம் நள்ளிரவு 12.01 மணிவரை
இராகுகாலம் 10.59-12.29 மணிவரை
சுபநேரம் 6.29-7.59 மணிவரை
கச்சியப்பசிவாச்சாரியார் குருபூசை

வளவன்

**மீனம்** தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள்.

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், உடன்பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும்.

**இடபம்** வழிபாட்டில்ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகலாம்.

**மிதுனம்** மனமகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வியாபார நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும்.

**கும்பம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பிள்ளைகளின் சுப காரியங்களை நடத்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம் பெறலாம், வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், ஆரோக்கியமான நாள், தொழில் நன்மையுண்டு

**சிம்மம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, போட்டியாக செயற்பட்டவர் மனம் மாறுவர், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**துலாம்** பொருளாதார நிலை உயரும், தொழில்ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** புதிய திட்டங்களை தீட்டி வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக தி.சிறிதரன் (அமெரிக்கா), ரி.கிருஷ்ண குமார் (ஓய்வுநிலை அதிபர்), த.பிருதிவிராஜ் (இலங்கை வங்கி முகாமையாளர், திரு நெல்வேலி), இ.குமரேசன் (வேலை மேற்பார்வையாளர், யாழ்.பல்கலைக் கழகம்), தி.ஜெகநாதன் (அமெரிக்கா), சி.விஜய லட்சுமி (அமெரிக்கா) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 'அச்சுறுத்தலால் வெளியேறினேன்' முன்னாள் பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அச்சுறுத்தல் காரணமாகவே தாம் நாட்டை விட்டு வெளியேறியதாக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு திரும்பிய அவர் ஊடகங்களுக்கு இதனைக் குறிப்பிட்டுள்ளார். கடுமையான அரசியல் அழுத்தம் மற்றும் உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே தாம் நாட்டைவிட்டு வெளியேற உந்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் தாம் கடமையாற்றி வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் கடுமையான அழுத்தம் காரணமாக தாம் நாட்டை விட்டு வெளியேற நேரிட்டதாகத் தெரிவித்துள்ளார். அழுத்தங்களை நிராகரித்த போது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தமக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் நல்லாட்சி நிலவி வரும் காரணத்தினால் தாம் நாடு திரும்பியதாகத் தெரிவித்துள்ளார். நாட்டின் நிலைமைகளில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் வைத்தும் தமக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனினும் அவுஸ்திரேலிய அரசாங்கம் தம்மை பாதுகாத்தது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ-11)

# யாழ்.ரயில் நிலையத்தில் வைபை இணைய வசதி!

(யாழ்ப்பாணம்)

யாழ் ரயில் நிலையத்தில் பயணிகள் பயன்படுத்துவதற்காக நேற்று முன்தினம் முதல் இணையத்தள வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ் ரயில் நிலையத்தில் வைபை வசதியை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ரயில் திணைக்களத்தின் வணிக அத்தியட்சகர் டி.டப்ளியூ. சிசிரகுமார தெரிவித்துள்ளார்.

இணையத்தள வசதிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் குமாரசிங்க சிறிசேன கலந்து கொண்டார்.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ். ரயில் திணைக்களத்தின் யோசனைக்கு அமைய இந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் 100 ரயில் நிலையங்களில் வைபை இணைய வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என சிசிரகுமார தெரிவித்துள்ளார். (ஏ-11)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 155**


## பயத்தை எதிர்கொள்ளல்

இந்த மன்னன், தானம் கொடுக்க ஆரம்பித்தான். வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் பசுக்களையும், அவற்றின் வாழ்நாளில் எல்லாப் பாலையும் கறந்து விட்ட பசுக்களையும், அவற்றின் வாழ்நாளில் எத்தனை முடியுமோ அத்தனை கன்றுகள் போட்டு விட்ட பசுக்களையும் சாகத் தயாராக இருக்கும் பசுக்களையும் தானமாகக் கொடுத்தான். அவர் செய்த தானம் அனைத்துமே இவ்வாறு மதிப்பற்றவையாகவே இருந்தது. 7 வயதான அவனது மகன் நசிகேதன் நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான். நசிகேதன்தான் இந்தக் கதையின் கதாநாயகன். அவனுக்கு அவன் தந்தை செய்தது சரியல்ல என்று தெரிந்திருந்தாலும் அதை எவ்வாறு சொல்வது என்று தெரியவில்லை.

பாருங்கள்.... குழந்தைகள் மிகவும் கூர்மையானவர்கள், அறிவு நிறைந்தவர்கள். அவர்களை ஏமாற்ற முடியாது. சமூகம் அவர்களை இன்னும் கெடுத்து நெறிப்படுத்தவில்லை. தந்தையையே கவனித்துக்கொண்டிருந்த அவன் இறுதியில் அவரிடம் சென்று, தந்தையே நீங்கள் உங்களுடைய மிகவும் விலையுயர்ந்த உடைமைகளையெல்லாம் தானமாகக் கொடுக்க வேண்டும். நானும் உங்களுடைய ஒரு விலை உயர்ந்த உடமைதான். என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள்? என்று கேட்டான்.

மன்னனுக்கு தான் செய்வதைத் தன் மகன் குத்திக் காட்டுகிறான் என்று புரிந்து விட்டது. ஆனால், அவனது அஹங்காரம் அதற்கு இடம் கொடுக்க அனுமதிக்கவில்லை. அவன் மதிப்பற்ற தானத்தைத் தொடர்ந்தான். மீண்டும் ஒரு முறை இந்தச் சிறுவன் மன்னனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டான். மன்னன் மௌனமாக இருந்தான்.

மூன்றாவது முறை சிறுவன் அவனை உலுக்கி தன்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறீர்கள் என்று கேட்டான். மன்னன் கோபமடைந்து உளறினான். "நான் உன்னை எமனுக்குக் கொடுக்கிறேன். எமனிடம் போ" என்றான். ஒரு சாதாரணமான பையனாயிருந்தால் "நான் ஏன் போக வேண்டும்? நீ வாழ்க்கை முழுவதையும் வாழ்ந்துவிட்டாய்; நீ போ!" என்று சொல்லியிருப்பான். ஆனால், நசிகேதன் மிகவும் சிரத்தையான, பொறுப்பான சிறுவன். பொறுப்பும் நேர்மையும் அவனைப் பேய் போலப் பிடித்திருந்தன. அவனுடைய தந்தையின் வார்த்தைகளுக்கு மரியாதை கொடுப்பதற்காக அவன் எமனைச் சந்திக்க முடிவு செய்தான்.



ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்... நசிகேதனே பூமியிலிருந்து எமனைச் சந்திக்கச் சென்ற முதலும் கடைசியுமான மனிதன். சாதாரணமான எமன்தான் மக்களைச் சந்திக்க வருவான். முதன் முறையாக நசிகேதன் எமனைச் சந்திக்கச் சென்றான்.

அவன் எமனின் வசிப்பிடத்தை அடைந்து விடுகிறான். ஆனால், எமன் அங்கு இல்லை! அவன் வெளியில் சென்றிருந்தான். நசிகேதன் மூன்று நாட்கள் காத்திருந்தான். இங்கு ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். கதையின் இந்த இடத்தில் ஒரு பெரிய உண்மை நிலைநாட்டப்பட்டிருக்கிறது. நாம் மரணத்தை தேடச் செல்வோமானால், அல்லது நம்மிடம் மரணத்தை எதிர்கொள்ளும் தைரியம் இருக்குமானால் மரணம் நமக்குத் தெரிந்த விதத்தில் அங்கு இருக்காது!

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் அரசியல்வாதிகளுக்கு கட்சி தாவ இடமளிக்கப்படாது

## பிரதியமைச்சர் சுட்டிக்காட்டு

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல் வாதிகள் கட்சி தாவுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது என பெருந்தெருக்கள் உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார். தங்களது இருப்பிற்காக இவ்வாறு சில தரப்பினர் கட்சி தாவல்களில் ஈடுபட முயற்சிக்கின்றனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கு மட்டும் மக்கள் வாக்களிக்க வில்லை.

மாற்றத்தின் தலைவராகவே நாம் மைத்திரிபால சிறிசேனவை போட்டியில் நிறுத்தியிருந்தோம். மகிந்த ராஜபக்ஷ மற்றும் குடும்பத்தினர் இன்னமும் நாற்பது ஆண்டுகள் ஆட்சி வகிப்பார்கள் என்றே கருதப்பட்டது.

பொது வேட்பாளர் ஒருவரை போட்டியிடச் செய்து நாம் அந்த நிலைமையை மாற்றியமைத்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன இன்று எமது ஜனாதிபதியாக கடமையாற்றி வருகின்றார். எதிர்காலத்தில் ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஆட்சி அதிகாரத்தை கைப்ப ற்றுவோம். மீண்டும் ஊழல் மோசடிகளில் ஈடுபடும் நபர்களை ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தப் போவதில்லை. கடந்த அரசாங்கம் வெள்ளை வான்களில் சென்று மக்களை கைது செய்தது. எனினும் நாம் விடயங்களை கண்கா ணித்து விசா ரணை நடத்தியே சட்ட த்தை அமுல்படு த்துகின்றோம் என எரான் விக்ர மரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

### மெய்வல்லுநர் போட்டி இன்று

வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி. பு. சண்முகராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற வுள்ளது. நிகழ்வில் பிரதமவிருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## நூல் வெளியீட்டுவிழா அழைப்பிதழ்- 2015

செல்வம் கண்ணதாசனின்

### அறிதல்: கற்றிடக் கற்றல்

தலைமை
திரு. ஐ.தயானந்தராஜா
(அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி)

காலம்:- 28.02.2015 (சனிக்கிழமை)
நேரம்:- பிற்பகல் 3.00 மணி
இடம்:- குமாரசுவாமி மண்டபம், யாழ். இந்துக் கல்லூரி.

தங்களை இருகரம் கூப்பி அழைக்கின்றோம்.
(நிகழ்வுகள் குறித்த நேரத்திற்கு நடந்தேற அனைவரின் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்)

நிகழ்ச்சி நிரல்
3.00- 3.05 மங்கல விளக்கேற்றல்
3.05-3.10 தேவாரம்
வரவேற்புரை- **திரு. சி.சுந்தரேஸ்வரன்**
(தலைவர் - பழைய மாணவர் சங்கம், யாழ். இந்துக் கல்லூரி)
ஆசியுரை-**திரு.வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்**
(ஓய்வுநிலை அதிபர்- விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)
தலைமையுரை- **திரு.ஐ.தயானந்தராஜா**
(அதிபர்- யாழ். இந்துக் கல்லூரி)
வாழ்த்துரை-**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
(தலைவர்- துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
வாழ்த்துரை- **கலாநிதி அசோகா தங்கொல்ல**
(பேராதனைப் பல்கலைக்கழகம்)
வாழ்த்துரை- **திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
(முதுநிலை விரிவுரையாளர், தலைவர்,பழைய மாணவர் சங்கம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)
தோழமையுரை- **வைத்திய கலாநிதி ஞா. காந்தினி**
(மார்பு இதய தலைமை அறுவை சிகிச்சை நிபுணர், லங்கா வைத்தியசாலை)
வெளியீட்டுரை-**திரு.நா.விஜயசுந்தரம்**
(பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை)

நூல் வெளியீடு
முதல் பிரதிபெறுபவர் திரு. ஆ.இராஜேந்திரன்
(மாகாணக் கல்விப் பணிப்பாளர்- வடமாகாணம்)
சிறப்புப்பிரதி வழங்கல்
மதிப்பீட்டுரை
பேராசிரியர் மா. சின்னத்தம்பி
(ஓய்வு நிலை கல்வியியல் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)
ஏற்புரை-நூலாசிரியர்
நன்றியுரை-திரு.செ.சிவகுமாரன்
(பிரதி அதிபர்- விக்ரோறியாக் கல்லூரி , சுழிபுரம்)

விழா ஏற்பாட்டுக்குழு

## பேசும் படம் -37

இடம்:- கொழும்பு கோள் பீச்.




ஐந்தறிவுள்ள காக்கைக்கே புரிகிறது ஆபத்தென்று ஆறறிவுள்ள மனிதனுக்கு...?

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
ஜெ.பெனியேல்,
மன்னார்.

# பொதுபலசேனாவின் பிக்குகள் நீதிமன்றத்திற்கு வரவேண்டும்

(கொழும்பு)

**பொதுபல சேனா அமைப்பின் ஆறு பௌத்த பிக்குகளுக்கு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு கோட்டே நீதிமன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

அமைச்சர் ரிசாட் பதியூதினின் அலுவலகத்திற்கு அத்துமீறி பிரவேசித்த சம்பவம் தொடர்பில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பு 2 இல் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்திற்கு பௌத்த பிக்குகள் அத்துமீறி பிரவேசித்தனர் என குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்காக எதிர்வரும் 12ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொதுபலசேனாவின் பௌத்த பிக்குகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வட்டரெக்க விஜித தேரர் குறித்த அலுவலகத்தில் இருப்பதாக தெரிவித்து, பொதுபல சேனா பௌத்த பிக்குகள் அலுவலகத்தை முற்றுகையிட்டிருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பௌத்த பிக்குகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே வாக்கு மூலங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (இ-5)

# விஜயகாந்தை குடிமகன் என்பதா? கலைஞர் கருணாநிதி கண்டனம்

தேமுதிக தலைவருமான எதிர்க்கட்சித் தலைவருமான விஜயகாந்தை குடிமகன் என்று விமர்சித்ததற்கு திமுக தலைவர் கலைஞர் கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், அதிமுக ஆட்சியில் மரபுகள் அனைத்தையும் கைவிட்டு, எதை வேண்டுமானாலும் செய்கின்றனர்.

நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவருக்கு சட்ட சபையில் பிறந்த நாள் வாழ்த்துக் கூறுகின்றனர். அதே சமயம், எதிர்க்கட்சித் தலைவரான விஜயகாந்த்தை குடிமகன் என்று விமர்சனம் செய்கின்றனர்.

அதை எதிர்த்துக் கருத்துக் கூறினால், அந்தக் கட்சியின் சார்பில் எழுந்தால், ஜனநாயக ரீதியாக அனுமதி அளிக்காமல் சபையில் இருந்து காவலர்கள் மூலம் வெளியேற்றுகின்றனர். பின்னர், அந்தக் காவலர்களில் ஒருவரை வைத்தியசாலையில் அனுமதிக்கச் செய்து, அவரிடமே புகார் மனு எழுதி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்களைக் கைது செய்ய முற்படுகின்றனர்.

இவை அனைத்தும் சரியான நடைமுறைகள் இல்லை. நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு செயலுக்கு, உரிமைக் குழு நடவடிக்கை, பொலிஸ் நடவடி க்கை எனப் பல முனை நடவடிக்கை இயற்கை நீதிக்கு ஏற்றதுதானா என்பதை ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டிய அம்சமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழிக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கல்வியங்காடு ஜி.பி.எஸ். வீதியில் அமைந்துள்ள வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தில் சிங்கள, தமிழ், ஆங்கில டிப்ளோமா மற்றும் அடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கற்கை நெறி தொடர்பான விபரத்தினை




மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், மும்மொழிக் கற்கை நிலையம் மற்றும் வடமாகாணத்திலுள்ள சகல வலயக் கல்வி அலுவலகங்களிலும் பார்வையிட முடியும். மேற்படி புதிய வகுப்புக்களில் இணைந்து கற்க விரும்புபவர்கள், விண்ணப்பப்படிவத்தினை மேற்குறிப்பிடப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் மும்மொழிக் கற்கை நிலையத்திற்கு கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)




# நெல் கொள்வனவு நாளை முதல் யாழில்

## அரசாங்க அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பெரும் போக நெற் கொள்வனவு நாளை சனிக்கிழமை முதல் இடம் பெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.**

கூட்டுறவு சங்கம் மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் யாழ். மாவட்டத்தில் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பெரும்போக நெற் கொள்வனவு நாளை சனிக்கி ழமை ஆரம்பமாகவுள்ளது.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் சாவகச்சேரி பகுதியிலும் பண்டத்தரிப்பு, உடுப்பிட்டி, கொடிகாமம், நீர்வேலி, மானிப்பாய், அச்சுவேலி ஆகிய பகுதிகளின் கூட்டுறவு சங்கங்களுடாக மாவட் டத்தின் ஏனைய பகுதிகளிலும் நெல்கொள்வனவு நாளை சனிக் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி கீரி சம்பா மற்றும் சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 50 ரூபா விற்கும் நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 45 ரூபாவிற்கும் கொள்வ னவு செய்யப்படவுள்ளது.

நெல்லின் ஈரப்பதன் உயர்ந்த பட்சமாக 14 வீதம் இருக்க வேண்டும் என உணவு பாதுகாப்பு அமைச்சினால்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தும் சபையினூடாக நெல் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் கமநலசேவைகள் பிராந்திய உத்தி யோகத்தர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரர்க



ளிடமுள்ள விண்ணப்பப் படிவ த்தை பூரணப் படுத்தி அவர் களின் அத்தாட்சி யுடன் சாவகச்சேரி யிலுள்ள கமநல திணைக்களத்தின் களஞ்சிய சாலையில் தமது நெல் விற்பனையை மேற்கொள்ள முடியும்.

மேலும் கூட்டுறவு சங்கங்களினூடாக நெல் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் மேற்கு றித்த சங்கங்களின் பொது முகா மையாளர் அல்லது தலைவரு டன் தொடர்பு கொண்டு தமது நெல் விற்பனையை மேற்கொ ள்ள முடியும். இதன்படி இவ்வருடம் ஒரு விவசாயியிடமிருந்து தலா 2ஆயிரம் கிலோ கிராம் நெல்லினை பெற்றுக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அரசாங்க அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (இ

# தெல்லியூரில் தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தின் தமிழ்விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காபுரம் லயன்ஸ்கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத் தலைவர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகவும் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாழ்த்துரைகளை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், பேராசிரியர் கி.விசாகரூபன், வலி. வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3-78)

# ஒன்றுகூடல்

(சுரணவாய்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வுநாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3-60)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திரர் சுவாமி தேவஸ்தான வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் கோ. சிவசுந்தரமூர்த்தி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஆலய உபயகாரர்கள், அடியார்கள் அனைவரையும் வருகைதருமாறு பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ-5)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப் ... (இ-5)

# சிதறல்களில் சில துளிகள் நூல் வெளியீடு நாளை

(சுரணவாய்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியை திருமதி நஸ்பியா அஜீத்தின் **சிதறல்களில் சில துளிகள்** நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரியில் மஃமூத் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் யாழ். இந்திய துணைத் தூதுவர் எ. நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

# பரதநாட்டிய நிகழ்ச்சி



மஹாசிவராத்திரியை முன்னிட்டு சமூகக் கலை மேம்பாட்டு நோக்கில் "சத்தியம் சிவம் சுந்தரம்" என்ற தலைப்பில் பொது நிகழ்வொன்றை யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்ச்சி நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 முதல் 6.30 வரை ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபம், 345, கோவில் வீதி, நல்லூரில் நடைபெறவுள்ளது. இதில் குறிப்பாக அபிநயக்ஷேத்ரா கலாலய மாணவிகளின் 'சம்பந்த்' எனும் சிவனுடனான உறவுகளின் சிறப்பை வெளிப்படுத்தும் நிருத்திய நாட்டிய நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. முற்றிலும் கலை மேம்பாட்டு நோக்கில் இடம்பெறும் இந்நிகழ்விற்கான அனுமதி இலவசமானது. நிகழ்ச்சி சரியாக குறிக்கப்பட்ட நேரத்தில் ஆரம்பமாகும். (இ-5)

## தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும்

# வள்ளுவர் விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் வள்ளுவர் விழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை , மாலை என இரண்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.

காலை அமர்வு 9 மணிக்கும் மாலை அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் காலை அமர்வில் மாணிக்கவாசகர் வரலாறு ஓர் அகச்சான்றுக் கண்ணோட்டம் நூல் வெளியீடு இடம் பெறவுள்ளது. நூல் வெளியீட்டு சிறப்புரையை கம்பவாரிதி இ.ஜெயராஜ் வெளியிடவுள்ளார். தொடர்ந்து வள்ளுவன் வழித்தடத்தில் வல்லமை காட்டிய பெருங் கவிஞன் இளங்கோவே, கம்பனே, வில்லியே, பாரதியே என்ற தலைப்பில் இலக்கிய ஆணைக்குழு விவாதம் நடைபெறும். இதில் கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் நடுவராக செயற்படவுள்ளார்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் அமர்வு சாவகச்சேரி ஓய்வுநிலை கோட்டக் கல்வி அதிகாரி கு. சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆன்றோர் கௌரவம் மற்றும வழக்காடு மன்றம் என்பன இடம பெறவுள்ளன. வழக்காடு மன்றத்திற்கு கம்பவாரிதி நீதிபதியாகவும் பங்கு வகிக்கவுள்ளார். (இ-3-29)

# போதனாசிரியர் விண்ணப்பம்

யாழ். வடமராட்சிக் கல்வி வலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவின் 2015 ஆம் ஆண்டிற்கான கீழ்வரும் கற்கை நெறிகளுக்கு போதனாசிரியர்களுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னராக சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவில் ஒப்படைக்குமாறும் எழுத்தறிவு, சிங்களம் (இரண்டாம் மொழி) , மனை முகாமைத்துவம் , கேக் ஐசிங், முக ஒப்பனையும் தலை அலங்காரமும் என்பன பயிற்றுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் நிகழ்வு யாழில்

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் வித்தகம் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ஐ. தயானந்தராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் வள்ளுவநாடு எனும் தொனிப்பொருளில் இடம் பெறவுள்ள சிந்தனையரங்கில் குறள் காட்டும் அரசன் எனும் தலைப்பில் இரா. செல்வவடிவேலும் குறள் காட்டும் அமைச்சன் எனும் தலைப்பில் ச. மார்க்கண்டும் குறள் காட்டும் குடிகள் எனும் தலைப்பில் கலாநிதி ஆறு. திருமுருகனும் ... களை வழங்கவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்களுக்கு இருக்கும் அதிகாரவரம்பைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும். அங்கஜன் ஜனாதிபதிக்குக் கடிதம்

தங்களுக்கு இருக்கின்ற ஏனைய கட்சிகளின் ஆதரவையும் தங்களின் அதிகார வரம்பையும் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு 100 நாள் வேலைத்திட்டத்தில் தீர்வு காண உடனடியாக முன்வர வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலமர்வு கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய தங்களின் தலைமையில் கட்டுநாயக்காவில் அண்மையில் இடம்பெற்றது. இதில் தேர்தலுக்கு முன்னதாக ஏனைய கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக கொள்கை அளவில் தீர்வு காணப்பட்டது.

இதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படுவது தொடர்பாகவும் தொகுதி வாரியான தேர்தல் முறையினை கொண்டு வருதல் என்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டன. நிறைவேற்று அதிகார பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது கடினமான ஒரு விடயமாகும். புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்திற்குள் முதலாவதாக தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு மாகாணத்துக்கான தலைமை நீதிமன்றம் ஒன்றும் உருவாக்கப்படல் வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற சார்பில் தங்களிடம் இக்கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

மேலும் வடக்கு கிழக்கு மக்கள் மாற்றத்திற்காக அதிகளவில் வாக்களித்து தங்களின் வெற்றிக்கு வழிவகுத்தனர் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இல்லாமல் அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது கடினமாகும். எனவே தற்போது தங்களுக்கு நிறைவேற்று அதிகாரமும் ஏனைய கட்சிகளின் ஆதரவும் இருக்கின்றது. எனவே வடக்கு கிழக்கு மக்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கிடைத்துள்ள இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டும். மாறாக வடக்கில் இராணுவ ஆளுநரை மாற்றுவது, பிரதம செயலாளரை மாற்றுவது மட்டும் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினையைத் தீர்த்து விடாது. நல்ல அதிகாரிகளை நியமித்தல் என்பது அரசின் கடமையாகும். இங்கு தேசிய பிரச்சினைக்கு தீர்வு என்பது தேசிய நிறைவேற்று சபையில் வலியுறுத்தல் வேண்டும். அவ்வாறு வலியுறுத்தப்படாவிட்டால் அது வரலாற்று தவறாக அமைந்து விடும்.

அத்துடன் அமைக்கப்பட இருக்கின்ற தேசிய அரசாங்கமானது ஒன்றிணைந்து 1987 ஜூலை 29 இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி அதே ஆண்டு நவம்பர் 14 இல் இலங்கை பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் ஆகியவற்றை அறிவித்தது. இதனால் ஒன்பது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. இந்த ஒன்பது மாகாணசபைகளில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர இணக்கம் காணப்பட்டது. அது பிற்பட்ட காலங்களில் பலனற்று போய் விட்டது. 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் இந்திய - இலங்கை உடன படிக்கையின் ஒரு பகுதியாக இருந்த போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நீண்டகால அரசியல் செயற்பாட்டின் பிரதிபலனாக அது கட்டியெழுப்பப்பட்டது. எனவே 13ஆவது சட்டமானது மாகாண சபைக்கு வழங்குதல் என்பது எந்தவிதமான அதிகார மறுப்புக்கும் இடம் இல்லை. இது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்று ஆகும்.

இலங்கை தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என்ற அடிப்படையை அது கொண்டிருந்தது. தற்சமயம் எமது புதிய அரசாங்கம் இப் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியும் என்ற வகையில் இனியும் காலம் தாழ்த்தாமலும் மற்றும் தேசிய பிரச்சினைக்கும் தீர்க்கமான தீர்வை காணவேண்டியுள்ளது. இத் தீர்வானது சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களும் ஒற்றுமையாக இணைந்து அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக அமைதல் வேண்டும். இதற்கு தங்களின் தலைமையிலான இப் புதிய அரசாங்கத்திற்கு நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தங்களுக்கு இருக்கின்ற அதிகார வரம்பைப் பயன்படுத்தி இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். இதனைத் தவறவிடாது நாம் எல்லோரும் இணைந்து தீர்வுகாண தங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என அங்கஜன் அதில் தெரிவித்துள்ளார்.

(9627)

**அங்கஜன் இராமநாதன்,**
**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர், வடமாகாண சபை உறுப்பினர்**

## கே.பி.தொடர்பான அறிக்கை 6 மாதத்தில் சமர்ப்பிக்கப்படும்

### சட்டமா அதிபர் தகவல்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச தலைவர்களில் ஒருவரான குமரன் பத்மநாதன் குறித்த அறிக்கை ஆறு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு சட்டமா அதிபர் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது. குமரன் பத்மநாதன் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜே.வி.பி கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணைகள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைகளின் போது குமரன் பத்மநாதனுக்கு எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து ஆராய்ந்து ஆறு மாத காலத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-5)

## 3ஆவது கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு- றெஜிஷின் இயக்கத்தில் நவீல்ட் பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி உரு வான 3 ஆவது கை குறும்பட வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பி.பபிராஜ் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரனும் கௌரவ விருந்தினராக ஆரம்பபிரிவின் ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் எ.மகேஸ்வரனும் கலந்து கொள் ளவுள்ளனர். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| |
|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32 3/4 சூரி செவ் 4இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4177 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 27 1/4 செவ் 12இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA/ கணக்காளர் அமெரிக்கா<br>தொ.இ: B/4180 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 38 3/4 செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: B/4181 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 19<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: BABS/ லண்டன்<br>தொ.இ: B/4182 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| |
|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 64" செவ் 12இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/523 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 12<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/524 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 35 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/526 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC, MSC/ அரச தொழில்<br>தொ.இ: G/529 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றபோது...





யாழ். கரவெட்டி ஞானசூரியன் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...







யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...





யாழ். கரணவாய் மணியகாரன்- தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில கருத்தரங்கு கடந்த செவ்வாயன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றபோது...



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் 35 இலட்சம் ரூபா செலவில் வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் 20 புற்று நோயாளருக்கு மாதாந்த உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். அத்துடன் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அறக்கொடை நிறுவன ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன், வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் கே.அகிலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்ட போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சியினரின் கடும் எதிர்ப்பால் பிரேரணையை நிராகரித்த தவிசாளர்

பருத்தித்துறை பிரதேசசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை க்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும ஆட்சேபனை தெரிவித்ததால் பிரே ரணை நிராகரிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன் தினம் முற்பகல் 10 மணியளவில் புலோலியிலுள்ள சபையின் மாநா ட்டு மண்டபத்தில் தவிசாளர் தலை மையில் இடம்பெற்றது. இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேசசபை உறுப்பினரான குமார சாமி ஐயா பன்னீர்ச் செல்வம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைய வேண்டும் என்றும் அதன்மூலம் தமிழ்க்கட்சிகள் ஒரு அணியில் இடம்பெற வேண்டும் என்றும் இதனைத் தீர்மானமாக நிறைவேற்றி சம்பந்தப்பட்ட கட்சிக ளின் தலைமைகளைக் கோர வேண்டும் எனத் தெரிவித்து ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

இப்பிரேரணையை கூட்டமைப் பின் மற்றொரு உறுப்பினர் கதிர வேலு தவயோகநாதன் வழிமொ ழிய முற்பட்டார்.

இதன்போது குறுக்கிட்ட சபையின் எதிர்க்கட்சியான ஈழமக்கள் ஜனநாய கக் கட்சியின் உறுப்பினரான தம்பிராசா மணீதரன் கடும் ஆட சேபம் தெரிவித்து, நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்.

நாம் மக்களுக்கான அபிவிருத் திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து அரசியல் கட்சிகளுக்கு கூட்டணி அமைக்கு மாறு அறைகூவல் விடுவதற்கு மக்கள் எம்மைத் தெரிவு செய்யவி ல்லை. நாம் மக்களின் எதிர்பார் ப்புக்களை நிறைவேற்ற ஆக்கபூர் வமான திட்டங்களைத் வகுத்து அதனை நடைமுறைப்படுத்தி மக்க ளுக்கு சேவையாற்ற வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட வல்வெட்டித்துறை நகரசபையில் மோசடிகள் இடம்பெறவில்லை என விசாரணை அறிக்கையில் கூறப்ப ட்டுள்ளதாம்.

அவ்வாறிருக்கு ஏன் அச்சபையை உங்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தலைமையிலான நிர்வா கம் கலைத்துள்ளது. அங்கு ஒற்று மையில்லை. உங்களுக்குள் ஒற்று மையை ஏற்படுத்துங்கள். அரசியல் கூட்டணி என்பது பெரும்பாலும் கொள்கை, கோட்பாடு, செயல்திட் டம், கருத்தொற்றுமை எனப் பல காரணிகளின் அடிப்படையில் அமையும்.

ஆனால் கூட்டமைப்பு எவ்வா றான அடிப்படையில் அமைந்துள் ளது? இதற்கு உங்களால் விளக்கம் கூறமுடியுமா? இந்த இலட்சணத் தில் இப்பிரேரணையை சமர்ப்பிக்கி றீர்கள். இப் பிரேரணையை நிறை வேற்ற முடியாது என ஆட்சேபம் தெரிவித்தார்.

இதேவேளை பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் கூறுகையில், நாட்டின் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் சித்திரை மாதம் அறிவிக் கப்படவுள்ளதாக சொல்லப்படுகி றது.

இத்தருணத்தில் இப்பிரேரணை சமர்ப்பிக்கப்படுகிறது. உண்மை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னருக்கு தேர்தல் பயம் பற்றிக் கொண்டுள்ளது. இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை அறிக் கையை ஐ.நா மனித உரிமைப் பேரவை மார்ச் மாதம் வெளியிட வேண்டும் என இங்கு பேரணிகள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கையின் புதிய அரசு இந்த விடயத்தில் ஒரு நம்பகத்தன்மை வாய்ந்த ஒரு விசாரணையை நடத்துவதாக உறுதியளித்துள்ளது. எனவே ஐ.நா விசாரணை அறி க்கை வெளியிடுவதை ஐ.நா மனித உரிமைப் பேரவை ஒத்தி வைப் பதில் தனக்கு கவலையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. விசாரணை அறிக்கை தாமதித்தாலும் தரமாய் வரும் என கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினர் சுமந்திரன் விளக்கம் வேறு சொல்கிறார்.

சர்வதேச அனுசணையுடனான உள்ளூர் விசாரணையை ஏற்றுக் கொள்வதென்பது கூட்டமைப்பின் முடிவல்ல. அது சுமந்திரனின் தனிப் பட்ட கருத்து. அது கூட்டமைப்பின் முடிவல்ல என கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார். தேசி யப்பட்டியல் உறுப்பினர் சுமந்தி ரனின் கொடும்பாவியை கூட்டமை ப்பின் ஒரு கோஷ்டியினர் எரிக்கி ன்றனர். விசாரணை அறிக்கையை வெளியிடுமாறு வலியுறுத்தி நடத் தப்படும் பேரணிக்கு ஆதரவு என மாவை சேனாதிராசா அறிக்கை விடுகிறார்.

மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றிய முதலமைச்சர் போராட்டங்களில் பங்கெடுப்பதை தவிர்த்து வருகிறார். இவ்வாறு மக்களின் அவலத்தில் அரசியல் பிழைப்பு நடத்தி அவர்களை ஏமாற்றிவரும் கூட்டமைப்பி னரு க்கு தேர்தல் பயம் பீடித்துள்ள நிலை யிலேயே இப்பிரேரணையைக் கொண்டு வருகிறீர்கள்.

ஜனநாயகத்தில் மக்களை தனி யாக தேர்தலில் சந்திக்கத் திரா ணியற்றுத்தான் இலங்கைத் தமி ழரசுக்கட்சி, பல குழுக்களை இணைத்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு என்ற மாயாஜால மந்திர த்தை கூறி மக்களை ஏமாற்றுகிறது.

இதில் முதலமைச்சர் விக்னே ஸ்வரனுக்கு ஆயுதப் போராட்ட வழி வந்த அரசியல் குழுக்களை இக் கூட்ட மைப்பில் தொடர்ந்தும் வைத்திருப்பதில் விருப்பமில்லை. இந் நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இணைய வேண் டும் என்று கோருவதை ஏற்கனவே கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினர் சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளதை பத்திரிகையில் பார்த்தோம்.

அக்கோரிக்கைகள் உள்ளூராட்சி மன்றங்களின் தீர்மானமாக நிறை வேற்ற முடியாது. கூட்டணிகள் என்பதை அக்கட்சிகளின் தலை மைகள் தீர்மானிக்கட்டும் இங்கு தீர்மானம் நிறை வேற்ற முடியாது என கடும் ஆட்சேபனை தெரிவி த்தார்.

கடும் வாதப் பிரதிவாதங்களை யடுத்து சபையின் தவிசாளர் பூ.சஞ் சீவன் வேறு வழியின்றி பிரேர ணையை நிராகரிப்பதாக அறி வித்தார். (இ-19)

# உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கைத் திறந்த பல்கலை க்கழக யாழ். பிராந்திய நிலையத் தினால் ஒப்பந்த அடிப்படையி லான செயற்றிட்ட உதவியாளரு க்கான பதவிக்கு விண்ணப்ப ங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அங்கீக ரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொ ன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் முதலாம் தர அல்லது இரண்டாம் தர வகுப்புச் சித்தி பெற்றிருத்தல் அவசியம்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்ப தாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவை யினை நாளை 28 ஆம் திகதி க்கு முன்னர் " உதவிப் பணிப்பா ளர், இலங்கைத் திறந்த பல்க லைக் கழகம், யாழ்ப் பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ (அல்லது நேரில்) அனுப்பி வைக்கும்படி கேட் டுக் கொள்ளப்படுகின்றது. (செ-11)

# பிரிவுத்துயர் பகிர்வு



### கண்ணன் தருண்

நோர்வே Oslo Stvner ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கண்ணன் தருண் கடந்த திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி மு.ப 11 மணிக்கு Stre gravlund, Tvte nveine 7, 0661 Oslo, Norway என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### அரவிந்தன் பவிஷா

பிரித்தானியா Graves end ஐ பிறப்பிடமாகவும், வசிப் பிட மாகவும் கொண்ட அரவிந்தன் பவிஷா கடந்த 23 ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முதல் ஞாயி ற்றுக்கிழமை வரை நண்பகல் 12 மணிக்கு Demelza House Hospitce Rook Lene, Sittingbourne, Kent ME9 8Dz என்னும் முகவரியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு இறுதி கிரியை நடைபெறும்.



### செல்லத்தம்பி லோகநாதன்

புலோலி சிங்கை நகரைப் பிறப்பிடமாகவும் டென்மார் க்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி லோகநாதன் அவர்கள் கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதி அஞ்சலி நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10 மணி முதல் Folkedaansehuset, Banetoften 42,7500 Holst bro,Denmark என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி காசிநாதன் பத்மாவதி

புங்குடுதீவு 4 ஆம் வட்டார த்தைப் பிறப்பிடமாகவும் வவுனி யாவை தற்காலிக வதிவிடமா கவும் கொண்ட காசிநாதன் பத்மா வதி கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள் ளிக் கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி. பொன்னுத்துரை மங்களேஸ்வரி

நயினாதீவு 4ஆம் வட்டார த்தை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட திருமதி. பொன் னுத்துரை மங்களேஸ்வரி கடந்த 25 ஆம் திகதி அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் நயினாதீவு சல்லி பரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சகாயநேசன் ரெக்ஸ் தர்ஷன்

நெடுந்தீவைப் பிறப்பிடமா கவும் Noisy le Sec ஐ வசிப்பிட மாகவும் கொண்ட சகாயநேசன் ரெக்ஸ் தர்சன் அவர்கள் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று அகாலமரண மானார்.


அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை l'Oasis de Noisy Z.A.de la Madeleine- rue du Vieux Chemin de saint-Denis- 93130 Noisy le Sec என்னும் முகவரியில் 9.30 மணி முதல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்



### திருமதி. பொன்னையா அன்னம்மா

மல்லாகத்தைப் பிறப்பிடமாக வும் சண்டிலிப்பாயை வசிப்பி டமாகவும் கனடாவை தற்கா லிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா அன்னம்மா கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடலுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு Ogden Funeral Homes,4164 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3 Canada என்னும் முகவரியில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சீவரட்ணம் சிவநாதன்

அல்வாய் தெற்கு ஓடையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப் பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் விவநாதன் அவர்கள் கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் Ogden Funeral Home, 41 64 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3 Canada என்னும் முகவரியில் மக்கள் பார்வை க்கு வைக்கப்பட்டு பின்னர் தகனம் செய்யப்படும்.



### திருமதி. சந்தியாப்பிள்ளை செல்வராசா திரேசம்மா

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சந்தியாப்பிள்ளை செல்வராசா திரேசம்மா நேற்று முன்தினம் காலமானார். அன்னாருக்கு நேற்று வியாழக்கிழமை பி.ப 2.30 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1080

## கந்தர்வலோகத்துப் பெண்...!



வைசாலி ராஜ்யத்தில் திரிசங்கம் எனும் ஊரில் கலாதரன் என்ற ஒரு தெய்வீக சிற்பி வசித்து வந்தான். அவன் கல்லில் வடிக்கும் சிற்பங்கள் உயிருள்ளவைபோல் தத்ரூபமாக இருக்கும்.

ஒருநாள் இரவில் பௌர்ணமி நிலவொளியில் மொட்டை மாடியில் அவன் உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய கனவில் மிக அழகான ஓர் இளமங்கை தோன்றி "சிற்பியே! என்னுடைய உருவச்சிலையை நீ கல்லில் செதுக்க வேண்டுமென நான் மிகவும் விரும்புகிறேன். என் ஆசையை நீ நிறைவேற்றுவாயா?" என்று கேட்டாள்.

அதிரூப சுந்தரியான அந்தப் பெண்ணின் அழகில் தன் மனத்தைப் பறிகொடுத்த கலாதரன், "கண்டிப்பாக வடிக்கிறேன். அடுத்த பௌர்ணமி இதே நேரம் உன் சிலையை நீ காண்பாய்!" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினான்.

அக்கணமே அவன் கனவும், தூக்கமும் கலைந்தன. கனவுதான் கலைந்ததே தவிர அந்த ரூபவதியின் அழகு அவன் மனதிரையில் நன்றாகப் பதிந்து விட்டது. உடனே, தன் ஊரின் எல்லையில், மலைகள் சூழ்ந்த பகுதியில், ஒரு நீர் வீழ்ச்சியருகே அமர்ந்து ஒரு பாறையில் இரவும், பகலுமாகப் பாடுபட்டு அடுத்த பௌர்ணமிக்குள் அவளுடைய உருவச்சிலையை செய்து முடித்தான்.

கலாதரனின் கனவில் தோன்றிய அந்த அழகி ஒரு கந்தர்வலோகத்துப் பெண். அவள் பெயர் நீலாஞ்சனா! ஒவ்வொரு பௌர்ணமி இரவிலும் அவள் தன் தோழிகளுடன் பூலோகத்தில் சஞ்சாரம் செய்வதுண்டு. அத்தகைய ஓர் இரவில்தான் உறங்கிக் கொண்டிருந்த கலாதரனின் கனவில் தோன்றித் தன்னை சிலை வடிக்குமாறு வேண்டினாள். பிறகு அடுத்த பௌர்ணமி இரவில் வழக்கப்படி அவள் தன் தோழிகளுடன் பூலோக சஞ்சாரத்திற்குப் புறப்பட்டாள். நேராகத் தன் தோழிகளுடன் வைசாலி ராஜ்யத்துத் திரிசங்கத்தை அடைந்து, கலாத ரன் வடித்திருந்த சிற்பத்தைக் காட்டி நடந்தவற்றைக் கூறினாள

சிலையைக் கண்டு வியந்த நீலாஞ்சனாவின் தோழிகளில் ஒருத்தி, "இதற்கு உயிர் இருந்தால் இன்னொரு நீலாஞ்சனா பூலோகத்தில் தோன்றிவிடுவாள்," என்றாள். மற்றொருத்தி, "நீலா... நீ இதற்கு உயிர் கொடுத்து விடு!" என்றாள். மற்றொருத்தி, "உன்னுடைய அறிவையும், மனத்தையும் இதற்கு அளித்து விடு!" என்றாள். அதற்கு நீலாஞ்சனா, "சிலைக்கு என் உயிரைத் தந்து விட்டால்நான் என்ன ஆவது?" என்றாள்.

"இல்லை. கந்தர்வர்களாகிய நமக்கு அபூர்வ சக்திகள் உண்டு. நீ சிறிது காலம் உன் உயிரையும், மனதையும், புத்தியையும் சிலைக்கு அளிப்பாய். அதே சமயம் உன் உயிர், மனம், புத்தி ஆகியவை உன்னிடமும் இருக்கும். கந்தர்வ லோகத்திலும் பூலோகத்திலும் இரட்டைப் பிறவிகள் போல் இருப் பீர்கள்!" என்றாள் இன்னொரு தோழி.

"இது என்ன விபரீத விளையாட்டு?" என்று நீலாஞ்சனா கூற, "சிறிது காலம் நீ உன் அறிவினால் பல காரியங்களை சாதித்தபின், பூலோக நீலாஞ்சனாவை அழித்துவிடு!" என்றனர் தோழிகள் அனைவரும். நீலாஞ்சனாவிற்கு அந்த யோசனை பிடித்திருந்தது. உடனே அவள் தன் சக்தியினால் சிலைக்கு உயிர் கொடுத்து. அதனுடன் தன் புத்தியையும், மனதையும் பகிர்ந்து கொண்டாள்.



சிலை உயிர் பெற்று பூலோக நலாஞ்சனாவாக மாறியது. உறககத்திலிருந்து எழுந்தவள் போல் உயிர்த்தெழுந்த பூலோக நீலாஞ்சனா, நகரத்திற்குச் சென்று தன் திறமையைக் காட்டுவோம் என்று எண்ணி இரவு முழுவதும நடந்தாள். காலையில் ஒரு காட்டை அடைந்தாள். அங்கு புதரிலிருந்து ஒரு புலி அவள் மீது பாய, அடு-த்த கணம் புலியின் மீது ஓர் அம்பு பாய்ந்தது.

தன்னைக் காப்பாற்றியது யார் என்று நீலாஞ்சனா சுற்று முற்றும் பார்க்க, தொலைவில் வில், அம்புகள் ஏந்தி ஓர் இளைஞன் குதிரையின் மீது வருவதைக் கண்டாள். அவளருகில் வந்ததும் அவன, "நீ இந்தக் காட்டில் என்ன செய்கிறாய்?" என்று கேட்டான்

முதல் பார்வையிலேயே அவனிடம் மனதைப் பறிகொடுத்த நீலாஞ்சனா, "நான் பிழைப்பைத தேடி தலைநகரம் செல்லும் வழியில் இந்தப் புலி குறுக்கிட்டது.

என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி! ஆனால் என்னிடம வாள் இருந்திருந்தால், நானே புலியைக் கொன்று இருப் பேன்" என்றாள். (தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2015
27

- ➢1560 -ஸ்கொட்லாந்திலிருந்து பிரெஞ்சுக்காரரை வெளியேற்ற ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமிடையில் பேர்விக் உடன்பாடு எட்டப்பட்டது.
- ➢1594 - பிரான்சின் மன்னனாக நான்காம் ஹென்றி முடிசூடினான்.
- ➢1700 - புதிய பிரித்தானியா தீவு கண்டுபிடிக்கப்பட்டது.
- ➢1801 - வோஷிங்டன், டிசி நகரம் அமெரிக்க காங்கிர சின் நிர்வாகத்தின் கீழ் வந்தது.
- ➢1844 - டொமினிக்கன் குடியரசு ஹெயிட்டியிடமிருந்து விடுதலை அடைந்தது.
- ➢1861 - போலந்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்து வார்சாவில் ம்க்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
- ➢1879 - சக்கரீன் என்ற செயற்கை இனிப்பூட்டி கண்டு பிடிக்கப்பட்டது.
- ➢1900 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவில் போவர்களின் தளபதி பியெட் குரோ னியே நிபந்தனையின்றி சரணடைவதாக அறிவித்தார்.
- ➢1900 - பிரித்தானிய தொழிற் கட்சி அமைக்கப்பட்டது.
- ➢1933 - பெர்லினில் ஜேர்மனியின் நாடாளுமன்றம் தீ வைத்து எரிக்கப்பட்டது.
- ➢1940 - ரேடியோ கார்பன் என்ற கரிமம்-14 கண்டு பிடிக்கப்பட்டது.
- ➢1942 - இரண்டாம் உலகப் போர்: ஜாவா கடலில் இடம் பெற்ற சமரில் கூட்டுப் படைகளை ஜப்பான் படைகள் தோற்கடித்தன.
- ➢1951 - ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதி ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் போட்டியிட முடியாதவாறு அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது.
- ➢1967 - டொமினிக்கா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை பெற்றது.
- ➢1976 - முன்னாள் ஸ்பானிய நாடான மேற்கு சகாராசாராவ அரபு ஜனநாயகக் குடியரசு என்ற பெயரில் விடுதலையை அறிவித்தது.
- ➢1991 - வளைகுடாப் போர்: அமெரிக்க ஜஜோர்ஜ் டபிள்யூ. புஷ் குவெய்த் விடுதலையானதாக அறிவித்தார்.

பிறப்புகள்

- ➢1807 - ஹென்றி லோங்ஃபெலோ, அமெரிக்க கவிஞர் (இ. 1882)
- ➢1902 - ஜோன் ஸ்டெயின்பெக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ. 1968)
- ➢1926 - டேவிட் ஹியூபெல், நோபல் பரிசு பெற்ற கனேடியர்
- ➢1942 - ரொபர்ட் கிரப்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்

இறப்புகள்

- ➢1869 - அல்போஃன்ஸ் தெலமர்த்தின், பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1790)
- ➢1936 - இவான் பாவ்லொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1849)
- ➢1989 - கொன்ராட் லொரென்ஸ், நோபல் பரிசு பெற்ற விலங்கியலாளர் (பி. 1903)
- ➢1998 - ஜோர்ஜ் ஹிட்சிங்ஸ், நோபல் பரிசு பெற்ற [illegible] (பி. 1905)
- ➢[illegible] (பி. 1935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

ஒருநாள் அவன் பிரசாதமாக வாங்கி வரும் மாம்பழத்தை, கிருஷ்ணன் வாங்கி சாப்பிடுகிறார். வீடு திரும்பும் வேங்கடநாதனிடம், "மாம்பழம் எங்கே?" என்று தந்தை கேட்க, கிருஷ்ணன் வாங்கிச் சாப்பிட்டு விட்டார் என்று அவன் கூறுகிறான்.

கோபம் கொண்ட தந்தை, "பொய்யா சொல்லுகிறாய்?" என்று வேங்கடநாதனை அடிப்பதுடன், தோப்புக்கரணம் போடச்சொல்கிறார். கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று கூறியபடி அவன் தோப்புகரணம் போட, கிருஷ்ணனே வந்து தோப்புக்கரணம் போடுகிறார்.


இக்காட்சியைக் காணும் தாயும், தந்தையும் வேங்கட்நாதனின் மகிமையை உணர்ந்து, கிருஷ்ணன் காலடியிலேயே உயிரை விட்டு, சொர்க்கம் அடைகிறார்கள்.

அண்ணன் வீட்டில் வாழும் வேங்கடநாதன், வாலிப வயதை அடைந்ததும் (ரஜினி) கும்ப கோணம் சென்று அங்குள்ள மடாதிபதியின் சீடராகிறார். வேத சாஸ்திரங்களை கற்றுத் தேர்ந்து, மதுரைக்கும், பிறகு தஞ்சைக்கும் சென்று அங்குள்ள புலவர்களை வாதத்தால் வெற்றி கொள்கிறார்.

குருவின் யோசனைப்படி, இல்லற வாழ்க்கையை மேற்கொள்கிறார், வேங்கடநாதன். சரஸ்வதி என்ற பெண் (லட்சுமி) அவருக்கு மனைவியாகிறாள். ஒரு குழந்தையும் பிறக்கிறது.

சாதி வேற்றுமைகளைப்பாராது, மாட்டுக்கார சிறுவனை சீடனாக ஏற்றதால், வேங்கட் நாதனை அந்த கிராமத்து மக்கள் ஊரை விட்டே விலக்கி வைக்கிறார்கள்.

இதற்கிடையே கும்ப கோணம் சென்று, குருவை சந்திக்கிறார். சம்சார சாகரத்திலிருந்து மீண்டு, சந்நியாசம் வாங்கிக்கொள். என்னுடைய வாரிசாக இந்த மடத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்" என்று கூறுகிறார், குரு.



ரஜினி- லட்சுமி படம் -ராகவேந்திரா இலவறசியாக இருந்த போது

இதற்கு தன் மனைவியின் சம்மதத்தைப் பெற முயற்சிக்கிறார், வேங்கடநாதன். அவள் சம்மதிக்கவில்லை. இதனால் சஞ்சலப்படும் வேங்கட்நாதன் முன், சரஸ்வதி தோன்றி, முன்ஜென்மங்களில் நீ பிரகலாதனாகவும், பின்னர் வியாசராகவும் பிறந்தவன். இந்த ஜென்மத்தில் நீ ராகவேந்திரர் என்று கூறி மறைகிறார்.

இதனால், மத்வ பீடாதிபதியாக பொறுப்பேற்கிறார். மனம் உடைந்த அவர் மனைவி, குழந்தையை உறவினரிடம் ஒப்படைத்து விட்டு கிணற்றில் குதித்து உயிர் விடுகிறாள். ஆவியாக தன்னை வந்து சந்திக்கும் அவளை தூய்மையாக்கி, சொர்க்கத்துக்கு அனுப்புகிறார், ராகவேந்திரர்.

பின்னர், நாடு முழுவதும் பிரயாணம் செய்கிறார். எழுதப்படிக்கத் தெரியாத இளைஞனை படிக்கச் செய்கிறார். முஸ்லிம் நவாப், பரிசாக அளிக்கும் மாமிசத்தை மலர்களாக மாற்றுகிறார்.

இப்படி பல அதிசயங்களை நிகழ்த்தும் ராகவேந்திரர், பல ஜோசியர்கள் கூறிய கருத்துக்களை பொய்யாக்கி, 78ஆவது வயதில் ஜீவ சமாதி அடைகிறார்.

### மாறுபட்ட ரஜினி

இந்தப் படத்தில், ரஜினிகாந்த் நடிக்கவே இல்லை. ராகவேந்திரராகவே வாழ்ந்து காட்டினார்.

இளைஞனாக, திருமணம் ஆனவராக, இளம் துறவியாக, நடுத்தர வயதுடையவராக, முதியவராக... இப்படி பல தோற்றங்களில் தோன்றி நடிப்பில் புதிய உயரத்தைத் தொட்டார்.


அவர் மனைவியாக லட்சுமி பொருத்தமாக நடித்தார். கௌரவ வேடங்களில், அம்பிகா (ராஜ நர்த்தகி), சோழமன்னன் (மேஜர் சுந்தர்ராஜன்), நவாப் (சத்யராஜ்) போன்றவர்கள் சிறிது நேரமே வந்தாலும், மனதைக் கவர்ந்தனர்.

மற்றும் மோகன், கே.ஆர். விஜயா, சோமயாஜலு, டெல்லி கணேஷ், மனோரமா, பண்டரிபாய், ஒய்.ஜி.மகேந்திரன், தேங்காய் சீனிவாசன், நிழல்கள்ரவி ஆகியோரும் உண்டு.

### அனுபவங்கள்

இந்தப்படம் தயாரானபோது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி எஸ்.பி. முத்துராமன்கூறியதாவது:- ராகவேந்திரர் படத்தை இயக்கும்படி ரஜினியும், பாலசந்தரும் வற்புறுத்தியதால், அந்தப் பொறுப்பை ஏற்றேன்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 89

...ஆடுறா ராமா ஆடுறான்னு குரங்கக் குட்டிக்கரணம் போட வைப்பானா இல்லையா குரங்காட்டி-இந்த மாதிரி கையில பிள்ளைய வச்சுக்கிட்டே சகல வித்தையும் பண்ணிப் பாக்குறா சுப்பஞ்செட்டியாரு; சாயல சடையத்தேவரு.

மேனகைபிள்ளையத் தூக்கிட்டு வந்து காமிக்க விசுவாமித்திரர் வச்சிருந்தாரு பாருங்க ஒரு மூஞ்சி..

அந்த மூஞ்சிய இன்னைக்கு மட்டும் குடுங்கன்னு இரவல் வாங்கி மாட்டிக்கிட்டு கடைவாய்ப் பல்லுல சிக்குன கறியவெளக்குமாத்துக்குச்சி ஒடிச்சுப் பல்லுக் குத்திக்கிட்டே பொறக்குப் பாத்துக்கிட்டிருக்காரு சடையத்தேவரு.


பேரு வையப்பா பேரனுக்கு கடைசியா ஒரு அம்ப விட்டுப்பாத்தாரு சுப்பஞ்செட்டியாரு.

பார்வை பிள்ளப்பக்கம் விழுந்திருமோன்னு வலிய முயற்சி பண்ணி மூஞ்சிய முதுகுப் பக்கம் வச்சிக்கிட்டு இன்னிக்கி மழை கிழ வருமான்னு அண்ணாந்து ஆகாயம் பாத்துக்கிட்டே சாவகாசமாச் சொல்றாரு சடையத்தேவரு.

நாயி போயி பன்னிக்கெல்லாம் நான் பேரு வைக்கிறதில்லப்பா!

சுண்டிச் சூம்பிக் கறுத்துப் போச்சு சுப்பஞ்செட்டியாரு மூஞ்சி.

சீ! இந்தாள மனுசக கணக்குல



சேக்க முடியாதுன்னு நெனச்சுக்கிட்டாரு மனசுக்குள்ள.

பிள்ளையக் காட்டிக் கருவாச்சிக்கு நல்லது பண்ணிப்புடலாம்ன்னு நெனச்ச நெனப்புல மண்ணடிச்சுட்டானே மனுசன்.

சாகப்போற கெழட்டு மாட்டுக்கே இம்புட்டு வீம்பு இருந்தா சல்லக்கட்டுக் காள ஒனக்கு எம்புட்டு வீம்பு இருக்கும்? ஒரு நாளைக்கு ஒன்னியத் தேடி வருவான்டா கெழவன்.

அன்னிக்கு ஒண்ணுக்கடி ஒந் தாத்தன் மடியில.

பிள்ளையத் தூக்கிட்டு விறு விறு விறுன்னு வெளியேறிட்டாரு சுப்பஞ் செட்டியாரு.

சுப்பஞ்செட்டியார் பிள்ளையத் தூக்கி நடக்க முதுகுல வச்சிருந்த மூஞ்சியத் திருப்பி பேரன் மூஞ்சியில தன் சாடை தெரியுதா பாத்திரலாம்ன்னு சடையத்தேவர் நெனைக்க சுப்பஞ்செட்டியார் முதுகுதான் தெரியுது பிள்ள மூஞ்சி தெரியல.

போய்ட்டாரு மனுசன்.

அதுக்குள்ள பிள்ளையக் காணோமேன்னு கதறி நெஞ்சு வெந்து அடிவகுத்துக் குடலு அந்து வந்துக்கிட்டிருக்கா கருவாச்சியும் வைத்தியச்சியும்.

உசுரு போயி உசுரு வந்திருச்சு எங்களுக்கு.

காய்ச்ச அடிக்கிற பிள்ளய எங்க தூக்கிட்டுப் போயிட்டீக எங்களக் கேக்காம?

வேறொண்ணுமல்ல ஆத்தா... தப்பைய வச்சுக் கட்டி நாய் வால நிமித்தலாம்ன்னு நெனச்சேன்.

தப்பையே வளஞ்சு போச்சு வந்துட்டேன்.

என்ன சொல்றீக?

ஒடஞ்சு போன குடும்பத்த இந்தப் பச்ச மண்ண வச்சு ஒட்ட வைக்கலாம்ன்னு பாத்தேன்.

நடக்கல பேரு வைக்கக் கூட யோக்யதை இல்ல. பெரிய மனுசனாம் பெரிய மனுசன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மீள்குடியமர்வு பூர்த்தியானதும் இந்திய அகதிகள் மீள்குடியமர்த்தப்படுவர்

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**வடபகுதி மக்களை மீள்குடியேற்றிய பின்னரே இந்தியாவில் உள்ள அகதிகள் மீள்குடியேற்றப்படுவார்கள் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் தெரிவித்துள்ளார்.**



வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்ட போதுவவுனியா கந்தசாமி ஆலயம் தாண்டிக்குளம் முருகன் கோவில் ஆகியவற்றுக்குநேற்று விஜயம் செய்த அவர் அங்குள்ள மக்களை சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடபகுதி உள்ளிட்ட இப்பகுதி மக்களுக்கு மீள்குடியேற்றம் தொடர்பான நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. அதனை நாம் கதைத்துப் பேசி காலத்தை கடத்தாமல் இங்குள்ள மக்கள் விரும்பும் படியாக பேசி தீர்வு காணவேண்டும்.

உங்களுக்குள் இணக்கப்பாடு ஏற்பட்டால் அதனை இலகுவாக பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் பேசி தீர்க்கலாம் எனத் தெரிவித்தார்.

இதன்போது இந்தியாவில் இருந்து அகதிகளை மீள அழைப்பது தொடர்பான நிலைப்பாடு குறித்து அவர் கூறுகையில்,

வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் பலர் உள்ளனர். அவர்களுடைய மள்குடியேற்றம் மற்றும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே இந்திய அரசின் உதவியுடன் அங்குள்ள எமது நாட்டு அகதிகள் மீள்குடியேற்றப்படுவர்.

அவர்களுக்கான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும் பட்சத்திலேயே அவர்களை மீள்குடியேற்ற முடியும் எனத் தெரிவித்தார். கடந்த காலத்தில் வீட்டுத் திட்டம் தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றதாக தங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தங்களின் கருத்து என்ன என கேட்ட போது

வீட்டுத் திட்டங்கள் கடந்த காலங்களில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. அவை சரியாகதான் வழங்கப்பட்டன. இங்குள்ள அரச அதிகாரிகளே அதனை முறைகேடாக பயன்படுத்தியுள்ளனர். அதனை தீர்ப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் என்றார்.

பூந்தோட்டம், சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் கேட்டபோது,

வவுனியா பூந்தோட்டம், சிதம்பரபுரம் ஆகிய முகாம் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மக்களின் இணக்கப்பாட்டுடன் அரச அதிகாரிகளுடனும் கதைத்து இதனை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என எமக்கு தெரியும். கடந்த காலத்தைப் போல் பேசி பேசி காலத்தை கழிக்காமல் இது தொடர்பான நிலைப்பாட்டை ஆராய்ந்து தெளிவுபடுத்துமாறு கோரியுள்ளேன். அதன் பின் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார். இதன் போது வவுனியா மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இந்த விஜயத்தின் போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் நுனைஸ்பாறுக் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (அ-2-250)

## சந்தை வீதியில் வாகனங்கள்; சந்தைக்கு வருவோர் சிரமம்

கிளிநொச்சி பொதுச்சந்தையின் வளாகத்திற்கு வெளியில் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் ஆகியவற்றை வீதியோரங்களில் நிறுத்துவதால் பொருட்களை கொள்வனவு செய்யவரும் பொதுமக்கள், வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடப்பெயர்விற்கு முன்னர் சந்தை வளாகத்தைச் சுற்றி மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் நிறுத்தமுடியாது என சந்தை நிர்வாகத்தினால் பெயர்ப்பலகைகள் இடப்பட்டிருந்தது.

தற்போது அவ்வாறான பெயர்ப்பலகைகள் பொருத்தப்படாததன் காரணத்தால் அனைத்து இடங்களிலும் மேற்படி வாகனங்கள் விடப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வருகின்றனர். இப்பிரதேசம் கரைச்சி பிரதேசசபைக்குட்பட்டதால் இவ்விடத்தில் ஈருருளி, உந்துருளி விட வேண்டாம் கரைச்சி பிரதேசசபை என பெயர்ப்பலகை பொருத்தப்பட்டால் இவ்வாறான இடையூறுகளை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

முச்சக்கரவண்டி தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்துவதால் முச்சக்கரவண்டி சாரதிகள் சிரமப்படுகின்றனர். எனவே இதனை சம்பந்தப்பட்டவர்கள் பார் வையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-271)

## சில வர்த்தகர்கள் பொருட்களை விலைக்குறைப்பு செய்யவில்லை

### நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(மல்லாவி)

துணுக்காய் மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள நகரப்பகுதி வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட கிராமப்புறங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவு சாலைகளில் நுகர்வுப் பொருட்கள் உட்பட கட்டடப் பொருட்களுக்கான விலைகள் விலைக்குறைப்பு செய்யாது விற்பனை செய்வதாகவும் பொருட்களுக்கான விலைப்பட்டியலும் காட்சிப்படுத்தப்படவில்லையெனவும் நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் பலவற்றில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை. அத்துடன் தராசுக்குரிய (நிறை) படிக்கற்கள் உரிய பிரதேச சபைகளினால் கடந்தாண்டும் நடப்பாண்டும் முத்திரையிடப்பட்டபோதும் பரிசோதனைகளுக்குட்படுத்தாத சில வர்த்தகர்கள் பொருட்களின் நிறைகளை நுட்பமான முறையில் கொள்வனவாளர்களிடமிருந்து கொள்ளையிடுகின்றனர்.

இது தொடர்பாக வர்த்தகர்களிடம் நுகர்வோர் கேட்கின்ற போது இருபகுதியினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதுடன் கைகலப்பும் இடம்பெற்றுள்ளது.

எனவே நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் பிரதேசங்களுக்குரிய சுகாதார பரிசோதகர்கள் உட்பட பிரதேச செயலாளர்கள் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு அரசாங்கத்தினால் விலைக் குறைப்பு செய்யப்பட்ட பொருட்களை விலைகுறைவாகப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் புதிய விலைப்பட்டியலை வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)




## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(திருவையாறு)

கிளி/மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் இவ்வாண்டுக்கான பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இதன்போது பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடலுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பழைய மாணவர் சங்க தலைவர் கேட்டுள்ளார். (அ-2-273)

♦ ♦ ♦ ♦ ♦

(கிளிநொச்சி)

கிளி/பூநகரி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

எனவே அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (அ-2)

## இரண்டு பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடம்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரியுள்ளது.

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள யா/ஒஸ்மானியா கல்லூரி, மன்னார் கல்வி வலயத்திலுள்ள மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி.ஆகிய1 AB பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இப்பதவிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III பொது ஆளணியைப் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, 2-I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-II ஐச் சேர்ந்தவர்கள் நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று வலயக்கல்விப் பணிப்பாளர் சிபார்சுடன் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் என அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கேட்டுள்ளார். (அ)

## டயலொக் சிம்முக்கு "கவரேஜ்" இல்லை

(கிளிநொச்சி)

டயலொக் கம்பனி தமது சிம் காட்களுக்கு கவரேஜ் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாதபட்சத்தில் டயலொக் பாவனையை நிறுத்தப் போவதாக உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து யாழ். டயலொக் நிறுவனத்திற்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த கிராமங்களில் உள்ள பொது மக்கள் இடம்பெயர்வின் பின்னர் மீளக்குடியமர்ந்த காலம் முதல் கூடுதலானோர் டயலொக் சிம்மை பாவித்து வருகின்றனர்.

இந்நிலையில் உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் டயலொக் பாவனையின் போது கவரேஜ் இன்றி இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

இது தொடர்பில் பல தடவைகள் டயலொக் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய நிறுவனத்தினர் குறித்த கிராமங்களுக்கான டயலொக் கவரேஜை விரைந்து ஏற்படுத்தித் தரவேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றிக்காய்ச்சலால் 926 பேர் உயிரிழப்பு

## மத்திய அரசு தகவல்

()

**இந்தியாவில் பன்றிக்காய்ச்சலுக்கு பலி யாகு பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதி கரித்து வரும் நிலையில் இதுவரை 926 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மத்திய அரசின் தகவலில் இந்த ஆண்டு பெப்ரவரி 24ஆம்திகதி வரை பன்றிக் காய்ச்சலால் 16 ஆயிரத்து 235 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலியானவர்களின் எண்ணிக்கை 926 ஆக உயர்ந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில்தான் பன்றிக் காய்ச்சலுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இங்கு இதுவரை 234 பேர் பலியாகியுள்ளனர். 4ஆயிரத்து 884 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இதற்கு அடுத்து குஜராத்தில் 231 பேர் பலியாகியுள்ள நிலையில், அங்கு 3ஆயிரத்து 527 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்தியப் பிரதேசத்தில் 127 பேர் பலியாகி இருக்க, 716 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகாராஷ்டிராவில் 112 பேர் பலியான நிலையில், ஆயிரத்து 221 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தெலுங்கானா, கர்நாடகா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் பலியானவர்களின் எண்ணிக்கை முறையே 54, 39 மற்றும் 38 ஆக உள்ளது.

டில்லியில் இதுவரை 8 பேர் பலியாகி உள்ளனர் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார். (இ-5)

பாரதச் செய்தி

# பவானி சிங்கை நீக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் புதிய மனு



முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா மேல்முறையீடு வழக்கில் அரசு தரப்பு சட்டத்தரணி பவானி சிங்கை நீக்கக்கோரி திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பவானி சிங் நடுநிலையாக செயற்படவில்லை. எனவே அவரை நீக்கிவிட்டு, அரசு தரப்பில் வாதாட வேறு சட்டத்தரணியை நியமிக்கும் வரை ஜெயலலிதா வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஹெச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு முன்னர் இன்று விசாரணைக்கு வருகிறது.

முன்னதாக, ஜெயலலிதா மேல் முறையீட்டு வழக்கில் தன்னை 3ஆவது நபராக சேர்க்க வேண்டும் என்று திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன் சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டு மனு கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி.ஆர்.குமாரசாமி முன்னிலையில் 34ஆவது நாளாக நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, "அரசு சட்டத்தரணி பவானி சிங்கின் செயற்பாடு உள் நோக்கம் கொண்டதாக தெரிகிறது" என நீதிபதி குமாரசாமி கடும் கண்டனம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆவணங்கள் திருட்டு மேலும் இருவர் கைது

பெற்றோலிய அமைச்சகத்தில் இருந்து அரசின் கொள்கைகள் குறித்த ஆவணங்கள் திருடப்பட்ட வழக்கில் மேலும் இருவரை டில்லி பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் வனம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் இணை செயலாளரின் தனிப்பட்ட உதவியாளர்கள் எனத் தெரியவந்துள்ளது.

பெற்றோலிய அமைச்சகத்தில் இருந்து முக்கிய ஆவணங்கள் திருடப்பட்டிருப்பது அண்மையில் அம்பலமானது. இது தொடர்பாக டில்லி பொலிஸார் வழக்கு பதிவு செய்து ரிலையன்ஸ் உள்ளிட்ட ஐந்து முக்கிய நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள், பத்திரிகையாளர் உட்பட மொத்தம் 12 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று காலை (வியாழக்கிழமை) சுற்றுச்சூழல் அமைச்சக இணை செயலாளரின் தனி உதவியாளர் ஜிதேந்தர் நக்பால் மற்றும் வனத்துறை அமைச்சக இணை செயலாளரின் தனி உதவியாளர் விபின்குமாரும் கைது செய்யப்பட்டதாக டில்லி குற்றவியல் பிரிவின் கூடுதல் பொலிஸ் ஆணையர் ரவீந்திர யாதவ் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது, "விபின்குமார் இதற்கு முன்னர் பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயுத் துறைக்கு மாற்றப்பட்டவர் ஆவார். அங்கிருந்து அவரது தொடர்புடைய நபர்களிடமிருந்து அவர் இரகசிய ஆவணங்களை கை மாற்றியுள்ளார்.

நக்பால் மற்றும் விபின் ஆகியவர்கள் திருடப்பட்ட ஆவணங்களை லோகேஷிடம் வழங்கி உள்ளனர்" என்றார். கைது செய்யப்பட்டுள்ள நக்பால் மற்றும் விபினின் பெயர்கள் இரண்டாவதாக தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த திங்கட்கிழமை லோகேஷ் என்ற எரிசக்தித் துறை ஆலோசகர் குற்றவியல் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# முதல்வர் ஓ.பியின் உரையால் திகைத்துப்போன ஸ்டாலின்

சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தவறான தகவல்களை பதிவு செய்வதை அறிந்து திகைத்து போனதாக திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டப் பேரவையில் முதலமைச்சர் பன்னீர் செல்வம் படித்த 75 நிமிட பதிலுரையைக் கேட்டு கொண்டிருந்த போது, எவ்வளவு தவறான தகவல்களை சட்டமன்றத்தில் ஒரு முதலமைச்சர் பதிவு செய்கிறார் என்பதை எண்ணி திகைத்து போனேன்.

2011 ஆம் ஆண்டு அதிமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், 4640 மெகாவோட் மின்சாரம் கூடுதலாக கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டு தற்போது கிடைத்து வருகிறது என்று சொன்னவர், அதன் தொடர்ச்சியாக " மொத்தம் 22 ஆயிரத்து 440 மெகாவோட் மின்சாரம் கிடைக்க இந்த அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றார்.

ஆனால் அதிமுக அரசு பொறுப்பேற்ற பின், புதிய மின்திட்டங்கள் மூலம் ஒரு மெகாவோட் மின்சாரம் கூட உற்பத்தி செய்யவில்லை என்பது தான் உண்மை.

தனியார் நிறுவனங்களிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதிலேயே குறியாக இருக்கிறது அதிமுக அரசு.

அடுத்து, பெரிய தொழில் முதலீடுகள் பற்றி பன்னீர்செல்வம் படித்தார்.

அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகம் தொழில்துறையில் கடைசி இடத்திற்கு அதாவது 18ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறது. தமிழகத்தின் தொழில் வளர்ச்சி 2013-14 இல் வெறும் 1.61 சதவீதம் தான் என்பது மத்திய அரசின் புள்ளியியல் துறை தந்துள்ள புள்ளிவிபரம் சொல்கிறது.

உச்சநீதிமன்றத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குசாதகமானஆணை பெறப்படும் என்று முதலமைச்சர் படித்தார். கழக ஆட்சியில் ஜல்லிக் கட்டு தொடர்ந்து நடைபெற வேண் டும் என்பதற்காக 2009 இல் இயற்றப்பட்ட சட்டம் உச்ச நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டதோடு, ஜல்லிக்கட்டு நடத்தவும் தடை விதிக்கப்பட்டது. பிறகு வந்த அதிமுக அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த சீராய்வு மனுவினை விரைந்து விசாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்க தவறிவிட்டது.

உரிய காலத்தில் உச்ச நீதிமன்றத்தை அதிமுக அரசு அணுகியிருந்தால் சாதகமான உத்தரவை பெற்றிருக்கலாம். ஜல்லிக்கட்டு நடத்த முடியாமல் தென்மாவட்ட மக்கள் போராடிச் சோர்ந்த பிறகு, ஆணை பெறப்போகிறோம் என்று சொல்வது யாரை ஏமாற்றுவதற்காக? என்று அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

# பிரதமர் மோடி அரசாங்கத்தில் மனிதவுரிமை மீறல்கள் அதிகம்

## மனிதவுரிமை அமைப்பு குற்றச்சாட்டு

பிரதமர் நரேந்திர மோடி அரசில் மதக் கலவரம் அதிகரித்திருப்பதாக சர்வதேச மனித உரிமை அமைப்பான அம்னெஸ்டி குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் நிலம் கையகப்படுத்தும் அவசர சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அம்னஸ்டி அமைப்பின் ஆண்டறிகை நேற்று பிரிட்டனில் வெளியிடப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது,

இந்தியாவில் கடந்த மே மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பாஜக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. நல்ல நிர்வாகம், அனைவருக்குமான வளர்ச்சி, நிதிச் சேவைகளும், சுகாதாரமும் ஏழைகளுக்கும் கிடைக்கும் என பல்வேறு உத்தரவாதங்களை பிரசாரத்தின் போது மோடி அளித்திருந்தார்.

தனிமனித சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரத்தில் தலையிடுவதை அதிகாரம் படைத்தவர்கள் தொடர்கிறார்கள். உத்தரப்பிரதேசத்திலும் வேறு சில மாநிலங்களிலும் மதக் கலவரம் நடைபெற்றுள்ளது. ஜாதி வாரியான பாகுபாடு, ஜாதிக் கலவரம் ஆகியவை தொடர்ந்து பரவுகின்றன.

உ.பி.யில் இருபிரிவினருக்கிடையே நடைபெற்ற மதக்கலவரத்தில் அரசியல்வாதிகள் சிலரும் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசியதற்காக சிலர்மீது வழக்கு பதியப்பட்டுள்ளது. கடந்த டிசம்பரில், இந்து அமை ப்புகள் சிறுபான்மையினரைக் கட்டாயப்படுத்தி இந்து மதத்துக்கு மாற்றுவதாக தகவல்கள் வெளியாயின.

ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்கள் நிலங்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும் அபாயத்தை நிலம் கையகப்படுத்தும் அவசர சட்டம் உருவாக்கி யுள்ளது. குறிப்பாக, ஆதிவாசி மக்கள் புதிய சுரங்கங்கள், அணைகள் அல்லது அவற்றை விரிவாக்கும் பணிகளுக்காக அப்புறப்படுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# ஆவியுடன் பேச்சு; அஜித்பவார் தகவல்

மூடநம்பிக்கையை எதிர்த்துப் போராடிய நரேந்திர தபோல்கரைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடிக்க, மகாராஷ்டிர மாநில பொலிஸ் உயரதிகாரி ஒருவர் ஆவிகளுடன் பேச்சு நடத்தியதாக, தேசியவாத காங்கிரஸ் தலைவர் அஜித்பவார் தெரிவித்துள்ளார்.

மூடநம்பிக்கைக்கு எதிராகப் போராடியவர் நரேந்திர தபோல்கர். இவர் புனேவில் 2013ஆம் ஆண்டு மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்தக் குற்றவாளிகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில், புனேவின் பொலிஸ் ஆணையராக இருந்த குலாப்ராவ் போல், குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க அவருடைய அலுவலகத்திலேயே தபோல்கரின் ஆவியை வரவழைத்து அதனுடன் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியை மேற்கொண்டார் என்று அஜித் பவார் தெரிவித்துள்ளார்.

ஆனால் பொலிஸார் அதை மறுத்தனர். எனினும் அப்போதைய மாநில அரசு குலாப்ராவை இடமாற்றம் செய்தது.

இதுகுறித்து தபோல்கரின் மகன் ஹமீது நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறும்போது, ஆவிகளுடன் பொலிஸார் பேச முயற்சித்த தகவலை, தான் முன்னாள் துணை முதல்வராக இருந்தபோது அஜித் பவார் ஏன் தெரிவிக்கவில்லை? எப்படி பொலிஸ் குலாப்ராவ் குற்றமற்றவர் என்று சொன்னது?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைக்கப்பட வேண்டிய போராட்டங்கள்!



தமிழ் மக்களின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பது தொடர்பில் உலகம் எப்போதுமே உன்னிப்பாக கவனித்து வந்திருக்கின்றது. அது, இனவிடுதலைக்கான ஆயுதப் போராட்டம் வெற்றிகரமாக கோலோச்சிய காலத்திலும், அந்த ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் ஒட்டுமொத்தமாக தோற்கடிக்கப்பட்ட பின்னரான இன்றைய காலத்திலும் தொடர்ந்து கவனிக்கப்பட்டே வருகிறது.

ஆயுதப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்னால் தமிழ் மக்கள் பெரும்பாலும் ஆழ உறக்க நிலையிலேயே இருக்கின்றார்கள்- வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆழ் உறக்க நிலையிலிருந்து தண்ணீர் தெளிக்கப்பட்டு தமிழ் மக்கள் எழுப்பப்படும் ஒவ்வொரு தருணத்திலும் ஏதோவொரு முக்கிய நிகழ்வோ, மாற்றமோ ஏற்படுகின்றது. அல்லது இந்தியாவினாலும் மேற்கு நாடுகளினாலும் ஏற்படுத்தப்படுகின்றது. கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ் மக்கள் அப்படி முக்கியமான மூன்று தருணங்களில் பங்களித்திருக்கின்றார்கள்.

1. இறுதி மோதல்களின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை வலியுறுத்துவதற்கான போராட்டங்களை குறிப்பிட்டளவில் முன்னெடுத்தமை. அல்லது அதற்காக மேற்கு நாடுகளினால் கையாளப்பட்டமை.

2. இந்தியாவின் விருப்பத்திற்காக இலங்கை அரசாங்கத்தால் தவிர்க்க முடியாமல் நடத்தப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெரும் பங்களிப்போடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆட்சியில் அமர்த்தியமை.

3. சீனா சார்பு இலங்கை அரசாங்கத்தினை மாற்றி தனக்குச் சார்பான அரசாங்கமொன்றை அமைப்பதற்காக இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் திட்டங்களுக்காக கையாளப்பட்டமை. அல்லது ஒத்திசைந்தமை.

இந்த மூன்று தருணங்களிலும் தமிழ் மக்களுக்கு சில சிறிய நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்பதை மறுதலிக்க முடியாது. ஆனால், ஒட்டுமொத்தமான நன்மைகள் என்பது தமிழ் மக்களைக் கையாண்ட தரப்புக்களுக்கே கிடைத்தன. அதனைவிட முதல் இரண்டு தருணங்களும் மூன்றாவது பெரும் தருணத்துக்காக வடிவமைக்கப்பட்டவை. அதாவது, தமக்குச் சார்பான அரசாங்கமொன்றை இலங்கையில் அமைப்பதற்கான திட்டங்களின் போக்கில் இந்தியாவினாலும், மேற்குநாடுகளினால் ஏற்படுத்தப்பட்டவை.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஆழ் உறக்கத்திலிருப்பதும், கருவிகளாக கையாளப்படுவதும் விடுதலையையோ, உரிமைகளையோ பெற்றுத்தந்துவிடாது. இதை, நேற்றுப் பிறந்த குழந்தைகூட புரிந்து வைத்திருக்கின்றது. ஆனால், கருவியாக கையாளப்படுவதிலிருந்து விடுவித்துக் கொள்வது என்பதுவும் அவ்வளவு இலகுவானதல்ல.

அப்படியிருக்கின்ற நிலையில், கையாளப்படுவதன் போக்கில் மெல்ல நகர்ந்து சந்தர்ப்பங்களைப் பற்றி எமது வலிமையை உறுதி செய்ய வேண்டும். தமிழ் மக்களின் மன உறுதி மற்றும் போராட்ட குணம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசாங்கம் உள்ளிட்ட எந்தத் தரப்புமே இறுதியாக நம்பவில்லை. ஆயுதப் போராட்டத்தை மட்டுமே தோற்கடிக்க முடிந்திருக்கின்றது என்ற உண்மையையும் உணர்ந்து வைத்திருக்கின்றன.

அப்படியான நிலையில், தமிழ் மக்களை மிகுந்த அவதானமாகவே கையாள அல்லது எதிர்நோக்க வேண்டிய தேவை அந்தத் தரப்புக்களுக்கு உண்டு. அதனால்தான், தமிழ் மக்களாகிய எம்மை ஆழ் உறக்கத்தில் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதனை, இந்தியா, மேற்குநாடுகள் உள்ளிட்ட தரப்புக்கள் செவ்வனே செய்கின்றன.

நாம் எப்படி ஆழ் உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்வது என்பதுதான் இப்போதுள்ள பெரும் விடயம். ஏனெனில், ஆறு ஆண்டுகள் என்ற பெரும் உறக்க நிலையில் எமக்கு எதிரான மேலும், பல காரியங்கள் ஆற்றப்பட்டுவிட்டன. இது, தொடர்ச்சியாக முன்னெடுக்கபடும் பட்சத்தில் எமது முடிவுரையை நாமே எழுதிவிட்டு மயானங்களில் போய் படுத்துக் கொள்ள வேண்டிவரும்.

ராஜபக்ஷேக்களின் கடுமையான ஆட்சி மாற்றப்பட்டு கடுமையின் அளவு கொஞ்சமாக குறைக்கப்பட்ட அல்லது அப்படிக் காட்டப்படுகின்ற மைத்திரி ஆட்சிக்காலம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் காலப்பகுதியின் நீட்சியில் அவ்வளவுக்கு நம்பிக்கை கொள்ள முடியாது. ஆனால, கிடைத்திருக்கின்ற கால இடைவெளியை எம்மை சரியான புள்ளியில் ஒருங்கிணைப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது, எம்மை வன்முறை ரீதியிலான ஆயுத அரசியல் போராட்டத்தின் பக்கம் தள்ளாமல் வலிமையான ஜனநாயக ரீதியிலான அரசியல் போராட்டத்தின் பக்கம் நகர்த்துவதற்காக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான அரசியல் மீள் எழுச்சி என்பது இன்றைக்கு தவிர்க்க முடியாத ஒன்று. ஏனெனில், அது, இலங்கையின் சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கங்கள், இந்தியா, மேற்குநாடுகள் உள்ளிட்ட தரப்புக்களை எதிர்கொள்வதற்கு மாத்திரமின்றி, எம்மை பிழையான நோக்கங்களுக்காக கையாள முயலும் தமிழ் அரசியல் தலைமைகளையும் சரிப்படுத்துவதற்கு அவசியமாகின்றது.

தமிழ் மக்கள் எழுச்சிகொண்டு ஒருங்கிணைகின்ற ஒவ்வொரு தருணத்திலும் தமிழ் அரசியல் தலைமைகள் தவிர்க்க முடியாமல் இறங்கி வருகின்றன. இல்லாவிட்டால், அக்கறையின்றி தனிப்பட்ட அரசியல் நலன்களின் போக்கில் நடந்து எம்மை சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்றன. இதனை காலம் காலமாக உணர்ந்து வைத்திருக்கின்றோம். ஆயுதப் போராட்டத்தின் தோல்விக்குப் பின், தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் சிறுசிறு குழுக்கள் என்கிற அளவிலேயே முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

1. காணாமற் போனவர்களை மீட்டுத்தரக் கோரும் போராட்டங்கள்

2. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரும் போராட்டங்கள்

3. இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளை விடுவிக்கக்கோரும் போராட்டங்கள்

4. இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நீதி கோரும் போராட்டங்கள்.

இந்த போராட்டங்கள் அனைத்திலும் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களே அதிகம் பங்கெடுத்து வந்திருக்கின்றார்கள். நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்பது காணாமற்போனவர்களை மீட்கக் கோரும் போராட்டங்களிலும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டங்களிலும் உறவினர்களும் காணி மீட்பு போராட்டங்களில் உரிமையாளர்களுமே பங்கெடுத்து வந்தி ருக்கின்றனர். இறுதி மோதல்களில் நிகழ்த் தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு நீதி கோரும் போராட்டங்களிலேயே நேரடியாக பதிக்கப்பட்ட தரப்பிலிருந்து வெளியிலிருந்தும் சில தரப்புக்கள் பங்கெடுத்தன. இது தான் இந்தப் போராட்டங்களின் வீரியத்தினை அடுத்தகட்டத்துக்கு நகர்த்தாமல் சிறுநிகழ்வுகள் என்ற தோற்றப்பாட்டை வழங்கிவிட்டு ஓய்ந்து போயிருக்கின்றன.



இந்த போராட்டங்கள் அனைத்திலும் பாதிக்கப்பட்ட தரப்பு என்கிற ரீதியில் உறவினர்கள், உரிமையாளர்களை மாத்திரம் முன்னிறுத்தாமல் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தார்மீகக் கடப்பாடு இருக்கின்றது. அந்தக் கடப்பாட்டினை மறுதலிக்கின்ற அல்லது அசண்டையீனமாகக் கையாளுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் எமது இருப்புக்கு நாம் ஆப்பு வைத்துக்கொள்கின்றோம் என்று கருதிக்கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இந்தப் போராட்டங்களில் தவிர்க்க முடியாமல் சிறு பங்களிப்பை ஆற்றி வந்திருக்கின்றன. ஆனால் அது, அவ்வளவு அர்ப்பணிப்பாக இல்லை. அதுபோல போராட்டங்களின் மீள் எழுச்சி தமக்கே ஆபத்தாக மாறிவிடுமோ என்கிற அச்ச உணர்வோடு அணுகப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த நிலையில்தான், யாழ் பல்கலைக் கழக சமூகம் கடந்த செவ்வாய்க்கிழமை (பெப் 24, 2015) முன்னெடுத்த "இலங்கையின் இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள முன்னெடுத்த விசாரணைகளின் அறிக்கையை உடனடியாக வெளியிட வேண் டும்" என்று வலியுறுத்தும் கவனயீர்ப்புப் போராட்டம் கவனம் பெறுகின்றது.

ஏனெனில், தமிழ் அரசியல் போராட்டங்களின் முக்கிய கட்டங்களில் மாணவர்களும் இளைஞர்களும் பெரும் பங்களித்திருக்கின்றார்கள். அந்த பங்கினை தமிழ் அரசியல் தலைமைகள் பிழையாக கையாண்டிருக்கின்றன என்பது வேறு விடயம். ஆனால், தமிழ் மக்களின் போராட்ட குணம் என்றைக்குமே தோற்கடிக்க முடியாதது என்பதை மாணவர்களும் இளைஞர்களுமே தொடர்ந்தும் நிரூபித்து வந்திருக்கின்றார்கள். அனைத்து வகைப் போராட்டங்களிலும் அவர்களின் அர்ப்பணிப்பும் ஆக்ரோசமும் பெருமளவில் இருந்திருக்கின்றது. இப்போதும் அதுதான் அவசியமாக இருக்கின்றது.

உலக அரசியலின் போக்கினை சரியாக உள்வாங்கி, மக்களை சரியான புள்ளியில் இணைத்து, அரசியல் தலைமைகளை கையாண்டு எமது உரிமைகளுக்கான இலக்குகளை நோக்கி நகர்வதே தமிழ் இளைஞர்களின் முன்னாலுள்ள பெரும் கடமை. அது எந்தவொரு தருணத்திலும் ஜனநாயக அடிப்படைகளிலிருந்து மாறிவிடாமலும் யதார்த்த பார்வைகளிலிருந்து விலகி வில்லங்கங்களை வாங்கிக் கொள்ளும் அளவுக்கும் செல்லாத அளவுக்கு இருக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக சமூகம், தமிழ் இன விடுதலைப் போராட்டங்களின் தீர்மானம் மிக்க சக்தியாக தொடர்ச்சியாக செயற்பட்டு வந்திருக்கின்றது. இப்போதும் அவ்வாறான அவசியமொன்றை உணர்ந்து கொண்டு முன்வந்திருக்கின்றது. ஆனால் அது, வடக்குக்கு மாத்திரமானதாக இருக்காமல் வடக்குக்கு வெளியிலுள்ள கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் கூட அக்கறையை செலுத்தி கூட்டிணைந்து செயற்பாட்டுத் தளத்துக்கு நகர வேண்டிய பொறுப்புணர்வை எடுக்க வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களின் சார்பில் தீர்மானம் மிக்க அரசியல் முடிவுகளை யாழ்ப்பாணமும் கொழும்பும் எடுக்கும் நிலையை மாற்றி கிழக்கு நோக்கியும் அர்ப்பணிப்போடு நகர வேண்டும். அதுதான் தமிழ் மக்களின் மீள் ஒருங்கிணைப்புக்கும் எழுச்சிக்கும் மிகவும் அடிப்படையானது. எந்தவொரு தரப்பும் இன்னொரு தரப்பினை யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளாமல் கையாளவே கூடாது.


ஜனநாயக அச்சுறுத்தலுள்ள நாட்டுக்குள்ளேயே தொடர்ந்தும் இருக்கின்றோம். ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டிருக்கின்றது என்பதற்காக தமிழ் மக்களின் ஒருங்கிணைவையும் அரசியல் மீள் எழுச்சியையும் அனுமதிப்பார்கள் என்று அர்த்தமல்ல. ஆக, எமக்கு எதிராக வைக்கப்படுகின்ற பொறிகளையும் சூழ்ச்சித் திட்டங்களையும் விழிப்பாக எதிர்கொண்டு, எந்தவொரு தருணத்திலும் உணர்ச்சி மேலிடுகையில் சிக்கிக் கொள்ளாமல் அரசியல் போராட்டங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு செல்ல வேண்டியது இளைஞர்களின் கடமையாக இருக்கின்றது. அதுதான், ஆழ் உறக்கத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்து, சந்தர்ப்பங்களைக் கையாண்டு எமது நிலைபெறுகைக்கான ஆதாரத்தினைப் பற்றிக்கொள்ள உதவும்!

மிரர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச்சத்தம் ஓய்ந்துள்ளமை உண்மையான சமாதானமாகாது

## ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டில் துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்திருப்பது உண்மையான சமாதானம் ஏற்பட்டு விட்டதாக அர்த்தப்படாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்காவின் சர்வதேச தொடர்புகளுக்கும், ஒத்துழைப்புகளுக்குமான பிரதியமைச்சர் நொமயின்டியாமேபிக்கிடோ தலைமையிலான உயர்மட்டக் குழுவினரை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், யுத்தத்தினால் அழிவுகளை சந்தித் நாட்டை கட்டியெழுப்புவதற்கும் தென்னாபிரிக்க அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கும் அமைச்சர் ஹக்கீம் இதன் போது நன்றி தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்கவின் உயர்மட்ட தூதுக் குழுவினர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீமை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடினர். இலங்கைக்கான தென்னாபிரிக்கா உயர் ஸ்தானிகர் ஜிஒப் கியு.எம்.டொயிடஜ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளரும், கல்முனை மேயருமான சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கு பற்றியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு இந்நாட்டின் சிறுபான்மைச் சமூகங்கள் அளித்த ஆதரவு மகத்தானது என தூதுக் குழுவினரிடம் சுட்டிக்காட்டிய அமைச்சர் ஹக்கீம், வடகிழக்கிலும், நாட்டில் சிறுபான்மைச் சமூகங்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் புதிய ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றிகிடைத்தது. இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நாட்டைகட்டியெழுப்புவதற்கும் தென்னாபிரிக்கா பாலமாக உள்ளது. இனங்கிடையிலான விரிசலை தவிர்ப்பதற்கு மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்களைப் போக்கி, நம்பிக்கையை கட்டியெழுப்ப வேணடியது அவசியம்.

அதற்கான முயற்சியில் தென்னாபிரிக்கா போன்றநாடுகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

முஸ்லிம்களும் முப்பது ஆண்டு காலம் நீடித்தயுத்தத்தின் விளைவாகதங்களது உயிர்களையும், காணிகளையும், உடைமைகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்துள்ளனர் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**முரண்பாடுகளுக்கு பின்பே நல்லாட்சி மலர்ந்தது**

அமைச்சர் கூறியவற்றை செவிமடுத்ததென்னாபிரிக்க பிரதியமைச்சர் நொமயின்டியா மேபிக்கிடோ தங்களது நாடும் இனவேறுபாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், தங்களில் பலரும் பயங்கரவாதிகளென அடையாளப்படுத்தப்பட்டிருந்ததாகவும், சிறைவாசம் கூட அனுபவிக்கநேர்ந்ததாகவும் கூறினார். எல்லாதடைகளையும் தாண்டி தென்னாபிரிக்காவில் நல்லாட்சி மலர்ந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

தென்னாபிரிக்காவில் உண்மையைக் கண்டறிவதற்கும். நல்லிணக்கத்திற்குமான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை ஒத்த முன்னெடுப்புகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு சிறந்த முன்னுதாரணமென்றும் அந்நாட்டு பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வரிக்குறைப்பை நடைமுறைப்படுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

## நிதி அமைச்சர் எச்சரிக்கை



குறைக்கப்பட்ட வரியின் அடிப்படையில் வாகனங்களை விற்பனை செய்யத் தவறும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் அண்மையில் சமர்ப்பித்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் சில வகை வாகனங்களுக்கான வரியை குறைத்திருந்தது.

வாகன இயந்திரத்தின் வலு ஆயிரத்திற்கும் குறைந்த வாகனங்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை கொள்வனவு செய்யும் பொதுமக்களுக்கு பாரியளவில் நன்மைகள் கிடைக்கும்.

எனினும் ஒரு சில நிறுவனங்கள் இந்த சலுகையை வழங்குவதில்லை, சிறு தொகையை மட்டும் குறைத்து வழங்குகின்றன என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உரிய முறையில் மக்களுக்கு வாகன வரிக் குறைப்பு நலனை வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மீனவர் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசின் முயற்சி தேவை

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு அதிக முயற்சி எடுக்க வேண்டும் என தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் பேச்சுவார்த்தை தள்ளிப் போடப்பட்டமைக்கு தமிழக அரசு காரணமாக இல்லாத போது உரிய நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழக மீனவர்களின் படகுகளை மீட்பதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நியூசியம்

நியூசியம் என்று நாம் எல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதுமாதிரி நியூசியம் என்று ஒன்று இருக்கிறது. பழைய பொருட்கலை எல்லாம் காட்சிக்காக வைக்கும் இடம் நியூசியம் என்று நமக்குத் தெரியும்.

நியூசியம் என்னவென்றால் News- அதாவது செய்திகள் என்று சொல்கிறோமே இதைப்பற்றிய விபரங்கள் அடங்கிய கண்காட்சி ஒன்று இருக்கிறது. அதற்குத்தான் நியூசியம் என்று பெயர்.

பழைய பேப்பர் என்றால் அதை நாம் சர்வ சாதாரணமாக நினைக்கிறோம். அதிலேயும் முக்கியமான செய்திக்ளும் தகவல்களும் இருக்கும். பலசரக்குக் கடையிலே இருந்து பொருட்கள் வருகிற பொட்டளத்தில் கூட அபூர்வமான செய்திகள் இருக்கும். அதை அலட்சியப்படுத்தாமல் பார்ப்போம் என்றால் அதில் இருந்தும் தகவல்களைச் சேகரிக்கலாம்.

ஒரே நாளிலே தன்னுடைய மரியாதை இழக்கிறது செய்தித்தாள். ஆனால் அதுதான் பின்னர் சரித்திரமாகவும் மாறுகிறது. ஆனால் செய்தித்தாள்களை வைத்தும் பிரமாண்டமான காரியங்களை செய்ய முடியும் என்று அமெரிக்காவிலே ஒருத்தர் நிரூபித்திருக்கிறார்.

அமெரிக்காவிலே மசூசெட்ஸ் மாகாணத்திலே ராக்போர்ட் நகருக்கு போனால் அங்கே பேப்பர் இல்லம் என்று ஒரு மாளிகை இருக்கிறது. 1922 ஆம் ஆண்டில் எலீஸ் என்பவர் இந்த மாளிகையை அமைத்திருக்கிறார்.

பல ஆண்டுகளாக சேகரித்து வைத்திருந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட செய்தித்தாள்களை வைத்து அவர் மாளிகையை அமைத்திருக்கிறார். பசை போட்டு உருட்டி திரட்டி அந்த இல்லத்தை அமைத்திருக்கிறார். அதைக் கட்டி முடிக்க அவருக்குப் பல ஆண்டுகள் ஆகியிருக்கிறது. அதுக்குள்ளே செய்திகள் தொடர்பான பல தளபாடங்களை அவர் சேகரித்து வைத்திருக்கிறாராம்.

பல ஆண்டுகளாகியும் அந்தப் பேப்பர் மாளிகையுடைய சுவர்களை ஒரு சிறு கீறலோ, வெடிப்போ ஏற்படவில்லையாம். அதைப் பார்வையிட உலகத்திலே பல இடங்களில் இருந்தும் மக்கள் வருகின்றார்களாம்.

அந்தச் செய்தி மாளிகைக்குள்ளே முதலாம் உலகப் போரின் போது பரபரப்பு செய்திகளோடு வெளியான பத்திரிகைகளில் மட்டும் வைத்து ஒரு தொட்டில் உருவாக்கப்பட்டிருக்கிறதாம்.

News-யம் என்று சொன்னோமே இப்பொழுது அதற்கு வருவோம். அமெரிக்காவில் வோஷிங்டன் நகரத்தில் இது அமைந்திருக்கிறது.

சுதந்திர அரங்கம் அப்படி என்கின்ற பத்திரிகையாளர் குழுவாலே இது அமைக்கப்பட்டதாம். செய்தி என்ற துறை எப்போது தொடங்கியது?

எப்படி வளர்ந்தது அப்படி என்பதைப்பற்றி எல்லாம் விபரமாக சேகரித்து இங்கே காட்சிக்கு வைத்திருக்கிறார்கள்.

இந்த நியூசியத்தினுடைய நுழைவாயிலிலே 30 மொழிகளில் செய்திகள்(News) என்ற வார்த்தை பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்திய மொழிகளிலே ஹிந்தியும், வங்காளமும் அதில் இடம் பெற்றிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட செய்தி உலகத்திலே உள்ள தொலைக்காட்சிகளில் வெவ்வேறு கோணங்களிலே எப்படி எப்படி ஒளிபரப்பு ஆகிறது என்பதை அகன்ற வீடியோ திரையிலே இங்கே பார்க்க முடிகிறது.


இந்தக் கட்டத்தினுடைய முதல் மாடியில் ஒரு பூகோள உருண்டை இருக்கிறது. அதிலே உலகெங்கும் இருந்து வெளி யாகின்ற பதினோராயிரத்து எழுநூறு செய்தித்தாள்களினுடைய தலைப்புக்களை அந்த அந்த நாடுகளுக்கு மேலேயே பார்க்கலாம். செய்திகளை சேகரிக்கப் போய் வீர மரணம் அடைந்த பத்திரிகையாளர்களுக்கு என்றே ஒரு தனிப்பகுதி இருக்கின்றது.

அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்த கூடன்பர்க் அச்சிட்ட முதல் பைபிள் பழைய காலத்திலே கையெழுத்துப் பிரதியாகவே வெளியிடப்பட்ட அபூர்வ பத்திரிகைகள் எல்லாம் கூட இங்கே காட்சியில் இருக்கிறது.

ஓர் அதிசயம் என்னவென்றால் உங்களுடைய பிறந்த நாள் அன்றைக்கு வெளியான ஏதாவது ஓர் பத்திரிகை வேண்டுமா? அதற்குரிய பணத்தைச் செலுத்தி அதை இங்கே வாங்கிக் கொள்ளலாம். எதிர்காலத்திலே தொலைக்காட்சி பெட்டிகள் எப்படியெல்லாம் வடிவம் எடுக்கும் என்கின்ற மொடல்களையும் இங்கே வைத்திருக்கிறார்கள். நம்முடைய சந்தேகங்களை வேலை செய்து தீர்த்து வைப்பதற்காகவே பல பத்திரை யாளர்கள் அங்கே இருக்கிறார்கள். இந்த நியூசியத்தை பின்பற்றி எல்லா இடங்களிலேயும் இப்படியும் அமைக்கலாம் இல்லையா?

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சசிகலா, சுதாகரன் பற்றி நீதிபதி கேள்வி

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீடு விசாரணையில் ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் நாகேஸ்வர ராவும் சசிகலா வழக்கறிஞர் பசந்த்தும் தலா ஒன்பது நாட்கள் வாதிட்டார்கள். சுதாகரன், இளவரசி ஆகிய இருவரது வழக்கறிஞர் சுதந்திரம் ஆறு நாட்கள் வாதிட்டு தன் வாதத்தை நிறைவு செய்திருக்கிறார். ஜெயலலிதா தரப்பில் கம்பெனி வழக்கு மட்டும்தான் பாக்கி இருக்கிறது. மார்ச் மாதத்தில் தீர்ப்பு என்கிறது பெங்களூர் கோர்ட் வட்டாரம்.

ஜெ. தரப்பு வழக்கறிஞர்கள், சுதந்திரம, குமார், மணிசங்கர், அசோகன், செந்தில், அன்புக்கரசு, திவாகர், பன்னீர்செல்வம், செல்வகுமார், பரணிகுமார், நாகராஜன், தனஞ்செயன், முத்துக்குமார், கருப்பையா, பெருமாள் மற்றும் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் நாகராஜ், கம்பெனி வழக்கு சார்பாக ஜெயக்குமார் பட்டீல், குலசேகரன் ஆகியோர் ஆஜரானார்கள். தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சிறப்புப் பணி அமர்த்தல் ஐ.ஜியான குணசீலனும், டி.எஸ்.பியான சம்பந்தமும் ஆஜரானார்கள். இவர்கள் சார்பில் அரசு வழக்கறிஞர் பவானி சிங் ஆஜராகி வருகிறார்.

நீதிபதி: (பவானி சிங்கைப் பார்த்து) நீங்கள் எத்தனை நாட்கள் வாதம் செய்வீர்கள்?

பவானி சிங்: நான் தாயாராகி வருகிறேன். ஜெயலலிதா தரப்பு வாதம் முடிந்ததும் எத்தனை நாட்கள் வாதிடுகிறேன் என பதைச் சொல்கிறேன்.

நீதிபதி: சுப்பிரமணியன் சுவாமி வாதத்தைப் பதிவுசெய்யப் போகிறாரா?

பவானி சிங்: சுப்பிரமணியன் சுவாமி அன்று போனவர்தான். எந்தத் தகவலும் இல்லை.

சுதந்திரம்: இளவரசியின் தனிப்பட்ட சொத்து மதிப்பு ரூ.6,91,81,200. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள இளவரசிக்கு சொந்தமான சிறுதாவூர் பங்காளாவின் மதிப்பு தமிழக ஊழல் தடுப்பு போலீசார் ரூ.5, 40,52,298 என்று பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால், உண்மையில் ரூ.1,30, 52, 259 தான் செலவானது. பொதுப்பணித்துறை பொறியாளர் சொர்ணம் தன் வாக்கு மூலத்தில் சிறுதாவூர் பங்களாவுக்கு மதிப்பீடு செய்ய 25.10.1996 அன்று போகும்போது கட்டடம் முழுமையாகக் கட்டி முடிக்கப்படவில்லை. கட்டட வேலைகள் ஆரம்பித்து சில நாட்கள் தான் இருக்கும். நாங்கள் சென்றபோது கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கட்டட மதிப்பீடு செய்த முறை சரியில்லை என்றும் கூறியிருக்கிறார். குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313 இன்படி 107 முதல் 120 அரசுத் தரப்பு சாட்சியங்களின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்யும் போது எதன் அடிப்படையிலும் எங்களிடம் கேள்வி கேட்கப்படவில்லை.

நீதிபதி: குற்றவாளிகளின் 313 தன்னிலை விளக்கத்தைப் படித்துப் பார்த்திருக்கிறீர்களா? முதலில் அதைப் படியுங்கள். உங்கள் தரப்பு மனுதாரர்களிடம் 650 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதில் ஒரு கேள்விக்கும் முழுமையான பதிலளிக்காமல் ஆம், இல்லை என்ற இரண்டு வார்த்தைகளை மட்டுமே பதிவு செய்திருக்கிறார்கள். உங்கள் குற்றவாளிகள் கொடுத்துள்ள வாக்குமூலத்தைக்கூட முழுமையாகப் படிக்காமல் எப்படி வாதம் செய்கிறீர்கள்? அந்த வாக்குமூலங்களை முதலில் படியுங்கள்.

சுதந்திரம்: படித்துவிட்டுத்தான் வாதிட வந்திருக்கிறேன். 100 சதவிகிதம் படித்துவிட்டு வர முடியாது.

நீதிபதி: கீழமை நீதிமன்றத்தில் பதிவு செய்யாத வாக்குமூலங்களை நான் இங்கு ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதாரங்களைக் கொடுத்தால் மட்டுமே ஏற்றுக்கொள்வேன். இது முக்கியமான வழக்கு. முக்கிய ஆதாரங்களைக் கொடுக்க வேண்டும்.

சுதந்திரம்: ஸாரி யுவர் ஆனர். நீங்கள் விரும்பும் விதத்தில் வாதிட முடியாது.

நீதிபதி: கீழமை நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்பு மற்றும் ஆதாரங்கள் அடிப்படையாக இல்லையே. அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் என்ன?

சுதந்திரம்: பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவது.

நீதிபதி: என்னென்ன நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்கள்?

சுதந்திரம்: நிறைய நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் சொல்ல முடியாது.

நீதிபதி: ஆதாரங்கள் கொடுத்தால் ஏற்றுக்கொள்வேன். இல்லையென்றால் ஏற்றுக்கொள்ள மாட்டேன். (பவானி சிங்கைப் பார்த்து...) இதற்கு என்ன சொல்கிறீர்கள்.


பவானி சிங்: சந்தாதாரர்களிடம் இருந்து டெபாசிட்டாக 1,10,00,000 வசூலித்தது சட்டத்துக்குப் புறம்பானது. வைப்புத்தொகை வாங்கக் கூடாது. வாங்கிய தொகையையும் வேறு வழிகளில் பயன்படுத்தினார்கள்.

சுதந்திரம்: வேறு வழியில் என்றால் எந்த வழியில் பயன்படுத்தினோம் என்பதைச் சொல்ல முடியுமா?

பவானி சிங்: நீங்கள் பேசி முடியுங்கள். என்னுடைய வாதத்தின்போது சொல்கிறேன்.

சுதந்திரம்: இது அரசியல் காழ்ப்பு காரணமாக போடப்பட்ட வழக்கு. ஏ2 முதல் ஏ4வரை மூவருக்கும் சொந்தமாக கம்பெனிகள் இருந்தன. அதன் மூலம் கிடைத்த லாபத்தைக் கொண்டு சொத்துகள் வாங்கியுள்ளனர். இந்தச் சொத்துகள் அனைத்தும் ஏ1 ஜெயலலிதாவின் பணத்தில் வாங்கியதாக தமிழக ஊழல் தடுப்பு போலீசார் குற்றம்சாட்டியுள்ள னர். அதை உண்மை என்று கீழமை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதிபதி: ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது சட்டத்துக்கு விரோதமாக சம்பாதித்த பணத்தில்தான் சசிகலா, சுதாகரன், இளவரசி மூன்று பேரும் சொத்துகளை வாங்கி இருக்கிறார்கள். இதைத்தான் தமிழக ஊழல் தடுப்பு போலீசார் கீழமை நீதிமன்றத்தில் நிரூபித்து, தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கும் விதமாக உங்கள் செயற்பாடு இருக்கிறதே தவிர, உங்கள் தரப்பு நியாயத்தை ஆதாரத்தோடும், ஆவணங்களைக் கொண்டும் வாதிட்டால் மடடுமே நல்ல தீர்ப்பு வழங்க முடியும். நீங்கள யாரும் அதற் கான முயற்சியை மேற்கொள்ளவில்லை. ஊழல் தடுப்பு போலீசார் பொய் வழக்கு போட்டிருந்தாலும் குற்றவாளிகள் மீது சுமத்தப்படும் புகார் உண்மையா என்பதை


பவானி சிங்

யில்தான் தீர்ப்பு வழங்க முடியும்.

சுதந்திரம்: சிறுதாவூர் பங்களாவுக்கு வாங்கிய டைல்ஸ், மார்பிள்ஸின் விலை உயர்வாகக் கணக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் டைல்ஸ், மார்பிள்ஸ் வாங்கியது தொடர்பாக மும்பையைச் சேர்ந்த மாடசாமி என்பவர் அதன் விலைகளைப் பற்றி தன் வாக்குமூலத்தில் கூறி இருக்கிறார்.

நீதிபதி: நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதா?

சுதந்திரம்: ஏற்றுக்கொள்ளவில்லை.

நீதிபதி: பிறகு இதை ஏன் என்னிடம் சொல்கிறீர்கள். நான் மட்டும் எப்படி ஏற்றுக்கொள்வேன். நான் ஏற்றுக்கொள்வதை ஏற்றுக்கொள்வேன். நான் ஏற்றுக் கொள்ளாததை நீங்களும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நீங்கள் வைக்கும் வாதத்தில் 50 சதவிகிதத்தைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாது.

சுதந்திரம்: சூப்பர் டூப்பர் டி.விக்கு பல இடங் களிலிருந்து வருமானம் வந்தது. தமிழ்நாடு டூரிஸம் போர்டில் இருந்து ரூ.39, 60,000 வருமானம் வந்தது. அதேபோல சூப்பர் டூப்பர் டி.வி நிறுவனத்தின் மூலம் கேபிள் இணைப்பு பெற்ற வாடிக்கையாளர்கள் 1,200 பேரிடம் இருந்து சந்தாவாக 1,10,00, 000 வசூலிக்கப்பட்டது. அதை எங்கள் வரு மானமாக தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண் காணிப்புத் துறை எடுத்துக் கொள்ளவில்லை.

நீதிபதி: (குறுக்கிட்டு...) சூப்பர் டூப்பர் டி.வி எவ்வளவு முதலீட்டில் தொடங்கப்பட்டது.

சுதந்திரம்: சுதாகரனும், இளவரசியும் தலா 3லட்சம் வீதம் 6 லட்சம் ரூபாய் முதலீடு செய்து, நிறுவனம் தொடங்கப்பட்டது.

நீதிபதி: ஆறு லட்சம் முதலீட்டில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்துக்கு எப்படி இவ்வளவு தொகையை வாடிக்கையாளர்கள் டெபாசிட் செய்தார்கள். நீங்கள் சொல்வது நம்பும்


சுதந்திரம், குமார்

அலசி, ஆராய்ந்துதான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.

சுதந்திரம்: சுதாகரனின் வருமானத்தைத் தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ரூ.82,75,000 என்று பதிவு செய்துள்ளது. ஆனால் அதில் ரூ.77,75,000 மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் மூன்று லட்சம் ரூபாய் திரும்பத் திரும்பப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சூப்பர் டூப்பர் டி.வி நிறுவனத்துக்குப் பல வகையில் வருமானம் வந்தது. சந்தாதாரர்கள் மூலம் கிடைத்த டெபாசிட் 1,10,00,000. தமிழ்நாடு டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாக ரூ.1,50,000.00, செட்டி நாடு சிமென்ட் கார்பரேஷன் ரூ.50,000.00, சசிகலா 5,44,000 ரூபாயை ஒரு முறையும், 11,00,000 ரூபாயை ஒரு முறையும் 25,56,000 ரூபாயை ஒரு முறையும் என மூன்று முறையாக ரூ.42,00,000த்தை சுதாகரனுக்குக் கொடுத்தார்.

நீதிபதி: எதனடிப்படையில் கொடுத்தார்?

சுதந்திரம்: அக்கா மகன் என்ற முறையில் கொடுத்தார்.

நீதிபதி: இந்தக் காலத்தில் அப்பா, மகன் கொடுக்கல் வாங்கல்களிலேயே பிரச்னையாகி நீதிமன்றம் வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் எந்த ஆவணங்களும் இல்லாமல் அக்கா மகனுக்குக் கொடுத்தார் என்பதை எப்படி எடுத்துக்கொள்வது? .

சுதந்திரம்: சூப்பர் டூப்பர் டி.வி நிறுவனத்துக்கு பரணி பீச் ரிசார்ட் ரூ.22 லட்சம் லோன் கொடுத்தது. அதை சுதாகரனின் வருமானமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வருமானமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அதேபோல லெக்ஸ் பிராப்பர்ட்டி மூலம் ரூ.10 லட்சம் மற்றும் ரூ.20 லட்சம் லோன். வாங்கப்பட்டது. சுதாகரனுக்கு ரூ.20 லட்சம் லோன் மட்டும்தான் வந்தது. அதனால் ரூ.20 லட்சத்தை மட்டும்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ரூ.10 லட்சத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. (இதற்கான நகல்களை நீதிபதியிடம் கொடுத்தார்.)

நீதிபதி: (நகல்களைப் பார்த்து) முன்னாள் முதல்வரின் வழக்கில் தாக்கல் செய்கிற நகல்களை யார் இவ்வளவு கவனக் குறைவாக பைண்ட் செய்தது?

சுதந்திரம்: நாங்கள்தான் செய்தோம்.

நீதிபதி: இதை எப்படி விரித்துப் படிப்பது? என்ட்ரிகள் அனைத்தும் பைண்டிங் உள்ளே இருக்கிறது. சரியாக பைண்ட் செய்து கொடுங்கள்.

சுதந்திரம்: நிறைவாக நான் நான்கு பாயின்ட்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1. கூட்டுச் சதி 120(பி) மற்றும் குற் றம் செய்ய உடந் தையாக இருத்தல் 109 இந்த வழக்கு கள் என் மனுதாரர் களுக்குப் பொருந் தாது. இவர்கள் கூட் டுச் சதியிலும், குற் றம் செய்ய உடந் தையாகவும் செயற் படவில்லை.

2. ஜெயலலிதா வின் சொத்து மதி ப்பை அதிகப்படுத் திக்காட்ட வேண் டும் என்பதற் காக என் மனுதாரர்களின் சொத்துகளையும் இதில் இணைத்திருக்கிறார்கள்.

3. என் மனுதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் சொத்துகள் இருந்தன. லோன் வாங்கி, தொழில்கள் நடத்தி வந்துள்ளனர்.

4. ஜெயலலிதாவின் பணம் மற்ற குற்றவாளிகள் யாருக்கும் நேரடியாகவோ, வங்கிகள மூலமாகவோவரவில்லை. சசிகலா, சுதாகரன், இளவரசி வாங்கிய சொத்துகள் ஜெயலலிதா பணம்தான் என்பதற்கு தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை எந்த ஓர் ஆதாரங்களையும் நிரூபிக்கவில்லை.

எங்களுக்கு நீதி கிடைக்கும் என நம்புகிறோம். நான் இத்தோடு என்னுடைய இறுதி வாதத்தை நிறைவு செய்கிறேன்.

குமார்: ஏ1 முதல் ஏ4 வரையிலான அனைதது வாதங்களும் முடிந்துவிட்டன. இன்னும் கம்பெனி வழக்கு மட்டுமே பாக்கி இருக்கிறது. அதனால் எங்கள் தரப்பு ஆவணங்களை இங்கு வைத்துவிட்டுச் செல்ல தாங்கள அனுமதி வழங்க வேண்டும்.

நீதிபதி: ஏன் எடுத்துக் கொண்டே போய் விடலாமே?

குமார்: 166 வால்யூம் இருக்கின்றன. அதிக சுமையாக இருப்பதால் சுமக்க முடியவில்லை.

நீதிபதி: சரி வைத்துவிட்டுப் போங்கள். நாளைக்கு ஏதாவது பிரச்சினை என்றால் என்னை கேட்கக் கூடாது.

குமார்: கேட்க மாட்டோம்.

நீதிபதி: (பவானி சிங்கைப் பார்த்து) திங்கள்கிழமையிலிருந்து வாதிடுகிறீர்களா?

பவானி சிங்: வழக்கைப் படிப்பதற்காக ஐந்து நாட்கள் அவகாசம் வேண்டும்.

நீதிபதி: உச்ச நீதிமன்றம் தினம்தோறும் நடத்தி வழக்கை முடிக்கச் சொல்லி இருக்கிறது. கம்பெனி வழக்கு முடிந்ததும் நீங்கள் வாதிட வேண்டும்.!

கம்பெனி வழக்கு வாதம் நடக்கிறது!

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்தில் புதையுண்டு 108 பேர் உயிரிழப்பு!

(காபூல்)
**ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட பனிச் சரிவில் சிக்கி 108 பேர் உயிருடன் புதைந்து பலியாகியுள்ளனர் என்ற துயரச்செய்தி தற்போது வெளியாகியுள்ளது.**



ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலின் வடக்கு பகுதியில் உள்ள பஞ்ச்ஷீர் மாகாணத்தில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகின்றது.

மலைப்பாங்கான இந்த பகுதியில் சுழற்றி அடித்த சூறைக் காற்றின் விளைவாக நேற்று முன்தினம் திடீரென பனிச் சரிவும் ஏற்பட்டது.இரண்டு நாட்களாக மிரட்டி வரும் இந்த பனிப் பொழிவு மற்றும் பனிச்சரிவில் சிக்கி பஞ்ச்ஷீர் மற்றும் பாமியான் மாகாணங்களை சேர்ந்த 100இற்கும் அதிகமானோர் உயிருடன் புதைந்து இறந்து விட்டதாகவும், பனிக் குவியலில் சிக்கியிருக்கும் மேலும் சிலரை மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் பஞ்ச்ஷீர் மாகாண ஆளுநர் அப்துல் ரஹ்மான் கபிரி அறிவித்துள்ளார்.

இதுவரை 108 பேர் இறந்திருப்பது தெரியவந்துள்ளதாக இயற்கை பேரிடர் மேலாண்மை ஆணைய துணை இயக்குனர் தெரிவித்தார். பஞ்ச்ஷீர் மாகாணத்தில் மட்டும் நூற்றுக்கணக்கான வீடுகள் கடுமையாக சேதம் அடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான பகுதிகளில் பனிப்பொழிவின் தாக்கம் உள்ளது.

மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே, பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என உள்ளூர் ஊடகங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. (இ-5)

# அமெரிக்க-இஸ்ரேல் மோதல் வலுக்கிறது

(டெஹ்ரான்)

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகத்துக்கும் இஸ்ரேலிய ஜனாதிபதி பெஞ்சமின் நெதன் யாஹூ வுக்கும் இடையேயான மோதல் வலுத்து வருகிறது.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை, உலகத் தலைவர்கள் கைவிட்டுள்ளனர் என்று நெதன்யாஹூ குற்றஞ் சாட்டியதை அடுத்தே இந்த மோதல் வலுத்துள்ளது.

ஜெருசலத்துக்கு வெளியே ஒரு இடத்தில் உரையாற்றிய போதே இந்தக் குற்றச்சட்டை அவர் வைத்தார்.

ஈரானின் அணுத்திட்டம் ஏற்படுத்தியுள்ள பெரும் அபாயத்தை தடுக்க வேண்டியது தனது கடமை என்று அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய நெதன்யாஹூ கூறினார்.

ஆனால் ஈரானுடனான சர்வதேசப் பேச்சுவார்த்தைகள் இஸ்ரேலைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவி புரிந்துள்ளது என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி வோஷிங்டனில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அடுத்த வாரம் நெதன்யாஹூ அமெரிக்க நாடாளுமன்றத்தில் குடியரசுக் கட்சித் தலைவர்களின் அழைப்பின் பேரில் உரையாற்றத் திட்டமிட்டுள்ளது இரு நாடுகளுக்கும் இடையே மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

# ஆபிரிக்க நாடுகளுக்கு அதிகளவில் எபோலா மருந்து வழங்க ஒப்புதல்

(டோக்கியோ)

எபோலா நோய்க்கான மருந்துகளை ஆபிரிக்க நாடுகளுக்கு அதிகம் வழங்க ஜப்பான் ஒப்புதல் அளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் மிக வேகமாகப் பரவி வரும் எபோலா நோய்க்கு முழுவதுமாக மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நிலையில் ஜப்பான் வைத்தியர்கள் இந்த நோய் பரவாமல் தடுக்கும் வண்ணமும், நோயின் தாக்கம் சீராகக் குறையும் வகையிலும் மருந்துகள் தயாரித்து உள்ளனர். இதனால் உலக சுகாதார மையம் இந்த மருந்துகளை ஆபிரிக்க நாடுகளுக்கு அதிக அளவில் அனுப்பி வைக்க கோரிக்கை விடுத்தது.

இதையடுத்து ஜப்பானும் ஆபிரிக்க நாடுகளுக்கு அதிகம் எபோலா நோய் கட்டுப்பாட்டு மருந்துகளை அனுப்ப ஒப்புதல் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் எபோலாவினால் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குழந்தைகளுக்கு நோய் வராமல் பாதுகாக்க மூன்று பேரின் மரபணுக்கள் கலந்த குழந்தை

உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாக பிறப்பதற்கும், வளர்வதற்கும், தாயிடமிருந்து கிடைக்கும் "மிட்டோசோண்டிரியா" என்ற நுண்ணிய இழைமணி தான் முக்கிய காரணமாகும். மனித உடலில் உள்ள செல்களில் மிக நுண்ணிய அளவில் இருக்கும் இந்த நுண்ணிய இழை மணி நாம் உண்ணும் உணவை சக்தி வாய்ந்த ஆற்றலாக மாற்றுகிறது.

இந்த நுண்ணிய இழை மணி நலிவடைந்து காணப்பட்டால் இதயத்துடிப்பையும், மூளையின் செயற்பாட்டையும் வெகுவாக பாதிக்கும்.

இந்த நுண்ணிய இழை மணியானது தாயின் கரு முட்டையிலிருந்து குழந்தைக்கு கடத்தப்படுகிறது.

இவ்வாறு கடத்தப்படும் தாயின் இழைமணியானது நலிவடைந்திருந்தால், அக்குழந்தை நோயுள்ளதாகவும், கண்கள் குருடாகவும், தசைகள் சோர்வடையவும், இருதயம் பலவீனமடையவும் காரணமாகின்றன.

எனவே குழந்தை நோயில்லாமல் பிறப்பதற்கும், வளர்வதற்கும் ஏதுவாக ஐ.வி.எப். தொழில்நுட்பம் மூலம், மூன்றாவது நபரின் கரு முட்டையில் இருந்து கிடைக்கும் சக்தியுள்ள இழை மணிகளை தாயின் கரு முட்டையில் சேர்க்க பிரிட்டன் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் மூலம் நோயால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை வெகுவாக குறையும். இம்முறையில் வரும் 2016 ஆம் ஆண்டு உலகின் முதல் குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக இம்முறையை பயன்படுத்த பிரிட்டன் பாராளுமன்றத் தின் உயரிய பிரதிநிதிகள் சபை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.(இ-5)





# இந்துக் கோயில் அவமதிப்பு; முஸ்லிம் அமைப்பு கண்டனம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வோஷிங்டன் மாகாணத்தில் இந்துக் கோயிலை அவமதிக்கும் வகையில் அதன் சுவரின் மேல் நாஜிக்களின் ஸ்வஸ்திக் சின்னத்தையும், "வெளியேறு" (கெட் அவுட்) என்ற வாசகத்தையும் மர்ம நபர்கள் கடந்த 14 ஆம் திகதி எழுதியதற்கு அமெரிக்க - முஸ்லிம் நல்லுறவு அமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் மீது இனவெறிக் குற்றச் சட்டப்பிரிவின்கீழ் விசாரணை மேற்கொள்ள சர்வமதத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசை வலியுறுத்துவார்கள் என்று அந்த அமைப்பின் வோஷிங்டன் பிரிவு செயல் இயக்குநர் அர்ஸலான் புகாரி மேலும் தெரிவித்தார். (இ-5)

# செவ்வாய்க் கிரகத்தில் செல்பி எடுத்த ரோபோ



(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரகத்தை ஆராய்ச்சி செய்யவும், புகைப்படங்களை எடுத்து அனுப்பவும் நாசா விண்வெளி ஆய்வு மையத்தால் அனுப்பப்பட்ட க்யூரியாசிட்டி என்ற ரோபோ, தன்னைத் தானே செல்பி புகைப்படம் எடுத்து நாசா ஆய்வு மையத்துக்கு அனுப்பியுள்ளது.

செவ்வாய்க்கிரகத்தில் தரையிறக்கப்பட்ட க்யூரியாசிட்டி ரோபோ, அங்குள்ள தட்பவெப்ப நிலை, காற்று, மணல், பாறைகள் என எல்லாவற்றையும் கணித்து நாசா ஆய்வு மையத்துக்கு தகவல்களை அனுப்பி வருகிறது.

கடந்த 5 மாதங்களாக செவ்வாய்க்கிரத்தில் ஆய்வு செய்து வரும் க்யூரியாசிட்டி, அங்குள்ள பாறைகளைக் குடைந்தும், மணல் துகள்களின் மாதிரிகளையும் ஆய்வு மையத்துக்கு அனுப்பியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமை வேகத்தில் அரசின் விசாரணை

## ஜே.வி.பி. அரசு மீது குற்றச்சாட்டு

**போதைப்பொருள் விநியோகஸ்தர்கள் தொடர்பான விசாரணைகள் ஆமை வேகத்தில் அசமந்த போக்கில் காணப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது. மொனராகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொணடு உரையாற்றிய போதே கட்சியின் பிரதம செயலாளர ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.**



முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய அவரின் பதவி காலத்தில் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து வெலே சுதாவுடன் இணைந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுப்பட்டார்.

இந்நிலையில் தற்போது அவர் தலைமறைவாகியுள்ளதனால் அவரை கைது செய்ய முடியாது.

மேலும் போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையதாக சில பாராளுமன்ற உறுப்பினர்களினதும், வேறு பலரது பெயர்களும் குறிப்பிடப்பட்டு விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் இச்செயற்பாடுகள் அனைத்தும் ஆமை வேகத்திலேயே இடம்பெறுகின்றன எனவும், கஞ்சா பக்கெட்டுக்கள் மற்றும் பொதிகள் காணப்பட்டால் பொலிஸார் கைது செய்கின்றனர்.

அத்துடன் பாபுல் பக்கெட்டுக்கள் காணப்படின் ஓடிப்போய் ஆற்றில் குதிக்கும் வரை துரத்துகின்றனர்.

ஆனால் தொன் கணக்கில் குடு போதை பொருட்களை கொண்டு வருகின்றவர்களை கைது செய்வதற்கு தவறிவிடுகின்றனர் என ரில்வின் சில்வா மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# நீதியமைச்சர் மீது ஜே.வி.பி.புகார்

சர்ச்சைக்குரிய தனியார் பாதுகாப்பு நிறுவனமான அவன்ட் கார்ட் நிறுவனத்தின் உரிமையாளரை, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவே வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அவன்ட் கார்ட் நிறுவனத்தின் உரிமையாளர் நாட்டை விட்டு வெளியேற நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

அவர் வெளிநாட்டு பயணமொன்றை மேற்கொள்வதற்கு கடவுச்சீட்டை மீள பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும், பிரதமரின் ஆலோசகர் திலக் மாரப்பனவுமே தலையீடு செய்திருந்தனர்.

இது குறித்து நிறைவேற்றுப் பேரவையில் கேள்வி எழுப்பிய போது, அந்த விடயம் உண்மையானது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அவன்ட் கார்ட் நிறுவன உரிமையாளரின் கடவுச்சீட்டு தடை செய்யப்பட்டிருந்த போது அது எவ்வாறு மீள அளிக்கப்பட்டது என்பது பலருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை தண்டிக்கவிடாமல் எவரேனும் தடுத்தால் அதனை நாட்டிற்கு அம்பலப்படுத்துவோம்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தப்பிக்க இடமளிக்கப்பட முடியாது.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் மிகவும் இழிவான முறையில் பேசுகின்றனர்.

பாடசாலை மாணவர்களும் பெற்றோரும் சில வேளைகளில் நாடாளுமன்றிற்கு வந்து பார்வையிடுகின்றனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சபாநாயகர் தர்மசங்கடமான நிலைக்கு தள்ளப்படுகின்றார்.

எனவே இம்முறை நாடாளுமன்றிற்கு தகுதியானவர்களை மட்டும் மக்கள் அனுப்பி வைக்க வேண்டுமென அநுரகுமார திஸா நாயக்க தெரரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# தொகுதிவாரி தேர்தல் முறையால் பிரஜாவுரிமை பறிக்கப்படலாம்!

புதிய தேர்தல் முறையின் மூலம் மலையக மக்களின் உரிமைகள் மீறப்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மலையக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரஜாவுரிமையை மீண்டும் பறிப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒருபோதும் விட்டுக்கொடுக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

1948ஆம் ஆண்டு பறிக்கப்பட்ட மலையக மக்களின் பிரஜாவுரிமை 2003ஆம் ஆண்டு மலையக மக்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் தற்போதைய வாக்காளரின் எண்ணிக்கையின்படி சனத்தொகை விகிதாசாரத்தின்படி மலையக மக்களை பிரதிநிதித்துவப்படும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் 15 முதல் 16 பேர் அங்கத்துவம் வகிக்க வேண்டும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் அதிகமான அங்கத்தவர்களை கொண்டுவர முடிந்த போதிலும் தற்போது பாராளுமன்றத்தில் ஏழு அங்கத்தவர்களே இந்திய வம்சாவளி மக்களை பிரதிநித்துவப்படுத்துகின்றனர்.


புதிய தேர்தல் முறை தொகுதிவாரியாக உருவாக்கப்படுமானால் நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதி மூன்று தொகுதியாக காணப்பட்டாலும் நுவரெலியா மாவட்டத்தில் இருவர் மாத்திரமே தெரிவு செய்யப்படும் நிலை தோன்றும்.

அவ்வாறு புதிய தேர்தல் முறையில் பொது தேர்தல் நடைபெற வேண்டுமாயின் நுவரெலியாவில் 8 தொகுதியில் 4 அங்கத்தவர்களும், பதுளை மாவட்டத்தில் 2 அங்கத்தவர்களும், கண்டி மாவட்டத்தில் 2 அங்கத்தவர்களும் இரத்தினபுரி, கேகாலையில் தலா ஒவ் வொருவரும பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் வகையில் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும்.

மலையக மக்களைப் பொறுத்த வரை தனித்தொகுதி உருவாக்கப்பட்டு எமக்கு வழங்கப்பட்ட பிரஜா வுரிமையை பெற்றுக் கொடுக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ந்தும் போராடும்.

அத்துடன் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும், தொகுதிவாரி தேர்தல் முறை தொடர்பில் கட்சியின் ஆலோசனைகளை பெற வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்று கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அமிதாப்பச்சனுக்கு அமெரிக்க நீதிமன்றம் சம்மன்!



சீக்கியர்களுக்கு எதிராக கலவரத்தை தூண்டியதாக தொடரப்பட்ட வழக்கில், அமெரிக்க நீதிமன்றம் அமிதாப்பச்சனுக்கு நேற்று முன்தினம் சம்மன் அனுப்பியுள்ளது.

1984 ஆம் ஆண்டு, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, சுட்டுக் கொல்லப்பட்டவுடன், சீக்கியர்களுக்கு எதிராக கலவரம் வெடித்தது. இந்த கலவரத்தில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்படடனர். இந்நிலையில், 'ரத்தத்துக்கு ரத்தம்' என்று கோஷம் எழுப்பி, இக்கலவரத்தை தூண்டி விட்டதாக, நடிகர் அமிதாப்பச்சனுக்கு எதிராக அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் சீக்கிய உரிமை அமைப்பு வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கில் லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம், அமிதாப்ச்ச னுக்கு சம்மன் அனுப்பி உள்ளது. அந்த சம்மன, அமிதாப்பச்சனின் ஆலிவுட் மேலாளர் டேவிட் ஏ. உங்கரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்க சட்ட விதிகளின்படி, சம்மன் ஒப்படைக்கப்பட்ட 21 நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவர் பதில் அளிக்க வேண்டும். அதன்படி, வருகின்ற மார்ச் 17 ஆம் திகதிக்குள் அமிதாப்ச்சன் பதில் அளிக்க வேண்டும்.

அப்படி அவர் பதில் அளிக்க தவறும்பட்சத தல், அவருக்கு எதிராக தண்டனை நடவடிக்கை மற்றும் இழப்பீடு உத்தரவு பிறப்பிக்க கோரி லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தை அணுகப் போவதாக சீக்கிய உரிமை அமைப்பின் சட்ட ஆலோசகர் தெரிவித்து உள்ளார். (இ-5)

# ஹசாக்கான் பகுதியில் 400 கிறிஸ்தவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளினால் கடத்தல்

ஈராக், சிரியாவில் உள்ள பகுதிகளை கைப்பற்றி ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசம் என்ற நாட்டை உருவாக்கி உள்ளனர். அவர்கள் மாற்று மதத்தினரையும், ஷியா பிரிவு முஸ்லிம்களையும் கொன்று குவித்து வருகிறார்கள்.

சிரியா மற்றும் ஈராக் எல்லையில் உள்ள சில பகுதிகளை ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் கைப்பற்றி வைத்திருந்தனர். அந்த இடத்தை மீட்பதற்கு குர்தீஸ் படைகள் தாக்குதல் நடத்தியது. அங்கிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் விரட்டப்பட்டனர். இதனால் கோபமடைந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்குள்ள ஹசாக்கான் பகுதிக்குள் புகுந்து அப்பாவி மக்களை கடத்தி சென்றனர்.

ஹசாக்கான் பகுதியில் அசிரியன் பிரிவை சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுடைய கிராமத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் ஏராளமான கிறிஸ்தவர்களை கடத்தி சென்றுள்ளனர். 100 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் கடத்தி செல்லப்பட்டதாக சிரியா அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் அசிரிய மததலைவர் சினோகேபிரியேல் கூறும்போது, சுமார் 400இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்களை கடத்தி சென்றுள்ளனர். அவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளே அதிகம். கடத்தப்பட்டவர்களில் பலரை தீவிரவாதிகள் அழைத்து சென்ற போது வழியில் சுட்டு கொன்று விட்டனர். மற்றவர்கள் கதி என்ன என்று தெரியவில்லை. 12 கிராமங்களில் உள்ள கிறிஸ்தவர்களை கடத்தி சென்றுள்ளனர் என்று [illegible]

தீவிரவாதிகள் [illegible]க்குள் புகுந்த நேரத்தில் அந்த பகுதியை சேர்ந்த 1000 க்கும் மேற்பட்ட மக்கள் தப்பி ஓடினார்கள். அவர்கள் தற்போது அயல் நாடான லிபியாவு க்குள் செல்வதற்கு முயற்சித்து வருகிறார்கள். சிரியாவில் ஏற்கனவே உள்நாட்டு போர் நடந்ததை அடுத்து 30 ஆயிரம் அசிரிய கிறிஸ்தவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பி சென்றுவிட்டனர்.

சிரியாவில் 12 இலட்சம் கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள். கடந்த வாரம் லிபியாவில் வசித்து வந்த எகிப்து நாட்டை சேர்ந்த 21 கிறிஸ்தவர்களை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தலையை துண்டித்து கொலை செய்தார்கள். அதுபோல தற்போது கடத்தப்பட்டுள்ள கிறிஸ்தவர்களையும்ஐ.எஸ்ஐ.எஸ். தீவிரவாதிகள் [illegible] (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 130 | 120 |
| தக்காளி | 60 | 60 | 200 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 |
| கோவா | 100 | 80 | 70 | 80 |
| கரட் | 160 | 140 | 150 | 160 |
| பூசணி | 100 | 100 | 80 | 120 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 90 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | — | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 80 | 80 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 160 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 500 | — | 240 |
| போஞ்சி | 200 | 200 | 270 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 60 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50 | 40-60 |
| இராசவள்ளி | 100 | 160 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 60-90 | 120 | — | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைவான் கலாசாரம் முடிவுக்கு வந்துள்ளது!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

**வெள்ளைவான் கலாசாரம் முடிடுக்குக் கொண்டு வரபபட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜே வர்தன தெரிவித் துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்கா ணலில் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரியளவில் பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் வாகனத் தொடர ணிகளுடன், மக்களுக்கு இடை யூறு ஏற்படும் வகையில் அரசி யல்வாதிகள் பயணங்களை மேற் கொண்ட காலம் முடிந்து விட்டது.

நான் எந்தக் காலத்திலும் இவ் வாறு மக்களுக்கு இடையூறு ஏற்ப டும் வகையில் செயற்பட்டதில்லை.

இதுவரையில் உத்தியோக பூர்வ வாகனமொன்றையோ, வீடு ஒன்றையோ நான் பெற்றுக் கொள்ள வில்லை. எதிர்காலத் தலும் இவ்வா றான சலுகைகளை பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. தற்போ தைய அரசாங்கம் நீதிமன்றின் மீதோ அல்லது பொலிஸார் மீதோ அழு த்தங்களை பிரயோகித்ததில்லை.

தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதும் இல்லை. முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் மகன் யோசித ராஜபக்ஷ தொடர்பில் ஜே.வி.பி செய்த முறைப் பாடு குறித்து விசாரணை நடத்தப் படும் என ருவான் விஜேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# தேசிய ஔடத சட்டமூலம் மார்ச் 4 இல் சபையில்

(கொழும்பு)

தேசிய ஔடத சட்டமூலம் மார்ச் மாதம் 4 ஆம் திகதி பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உடனே நிறைவேற்றப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் நாம் முன் னைய அரசிலிருந்து வெளியேற சிறுநீரக நோய் தொடர்பான பிரச் சினையே மூலகாரணம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிறுநீரக நோய்களுக்கு உதவிய ளிக்கும் முகமாக ஜனாதிபதியால் திறக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நிதி ஆதாரம் உதவியோருக்கு கௌரவமளிக்கும் முகமாக நேற்று முன்தினம் காலி முகத்திடல் ஹோட்டலில் இடம் பெற்ற வைப வத்தின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில் ,

முன்னைய அரசின் அமை ச்சரவையில் சிறுநீரக நோய் தொடர் பில் பல்வேறு அறிக்கைகளை முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சம்பிக்க ரணவக்க, அத்துரலியே ரத்ன தேரர் ஆகியோர் சமர்ப்பித்த போதும் அப்போதைய அரசு அதற்கு இட மளிக்கவில்லை.

அதேபோன்று இந்த சிறுநீரக நோய்க்கு மூலகாரணமாக கருதப் படும் தரமற்ற இரசாயன உரம் தொடர்பில் முன்னாள் ஜனாதிப தியிடம் முறையிட்டபோது அவர் அதனை கண்டுகொள்ளவில்லை. அப்போது சர்வாதிகாரமிக்க குடு ம்ப ஆட்சியே நிலவியது.

இதுபோன்ற தேசிய ஔடத சட்டமூலத்திற்கு புகைத்தல் உருவ எச்சரிக்கையும் நடந்தது. இந் நிலையில் மார்ச் மாதம் 4ஆம் திகதி தேசிய ஔடத சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உடனடியாக அதனை நிறை வேற் றுவோம். சேனக பிபிலே எனது குருவாவார். அவரது கொள்கையே ஔடத சட்டமூலமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பௌத்த பிக்கு பணிப்பாளராக கடமையாற்றுவதில் என்ன தவறு?

## நிதியமைச்சர் கேள்வி

(கொழும்பு)

நிறுவனமொன்றின் பணிப்பா ளராக பௌத்த பிக்கு ஒருவர் கடமையாற்றுவதில் என்ன தவ றென நிதி அமைச்சர் ரவி கரு ணாநாயக்க கேள்வி எழுப்பியு ள்ளார்.

லங்கா ஹொஸ்பிடல்ஸ் நிறு வனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சியின் நெருக்கமான தீனியா வெல பாலித தேரர் நியமிக்கப்பட் டுள்ளார்.

பௌத்த பிக்கு ஒருவர் பணிப் பாளர் சபையில் உள்வாங்கப்பட்ட மைக்கு சில தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

எனினும் பௌத்த பிக்கு ஒரு வர் பணிப்பாளராக கடமையாற்று வதில் எவ்வித பிழையும் கிடை யாது என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமொன் றின் பணிப்பாளர் சபை உறுப்பின ராக முதல் தடவையாக பௌத்த பிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.


இது ஓர் சாதனையாகவே கரு தப்பட வேண்டும். இந்த அரசாங் கம் சாதனைகளைச் செய்யும் அரசாங்கமாகும் என நிதி அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

தீனியாவல பாலித தேரர் மஹா போதி அமைப்பின் செய லாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

லங்கா ஹொஸ்பிடல்ஸ் நிறு வனத்தின் பணிப்பாளர் சபை யில், முன்னாள் பாதுகாப்புச் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட வர்கள் கடமையாற்றியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 295

அனுசியா புஸ்பராசா





பிரியங்கா ஸ்ரீரங்கநாதன்





தயானா கருணாகரன்




தமிழினி ராதா



ஸ்ரீனுயா சிவஞானம்




சுலக்சினி ரவீந்திலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீரர்களின் போர் இன்று ஆரம்பம்





வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரிக்கும் இடையிலான 15ஆவது பெரும் துடுப்பாட்டப் போட்டி, இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதுவரையில் நடந்து முடி ந்த 14 போட்டிகளில் மகாஜனாக் கல்லூரி 3 போட்டிகளிலும் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி 4 போட்டிகளிலும் வெற்றிபெற்றன. 7 போட் டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. (க-23)






# ஸ்கொட்லாந்தை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் திரில் வெற்றி

ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் ஆப்கானிஸ்தான் 1 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

11ஆவது உலகக்கிண்ண தொடரில் நியூசிலாந்தின் டுனிடின் நகரில் நேற்று நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில், ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் முகமது நபி, முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணியில் மெக்லியாடு (0), கார்டினர்(5) ஏமாற்ற, கோட்ஜெர் (25), மக்கான் (31) சற்று தாக்குப்பிடித் தனர். அணித்தலைவர் மாம்சென் (23), பெர்ரிங்டன் (25), ஹக் (31) எவன்ஸ்(28) எனஒருவரும் பெரியளவில் சோபிக்கவில்லை.

50 ஓவர்முடிவில் ஸ்கொட்லாந்து அணி 210 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஆப்கானிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷபூர் ஜட்ரன் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பின்னர் எளிய இலக்கைத் துரத் திய ஆப்கானிஸ்தான் அணிக்கு நவ்ரோஜ் மங்கள், ஜாவேத் அமகதி ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது.

நவ்ரோஜ் 3 ஓட்டங்கள் எடுத்த போது, சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 1000 ஓட்டங்களை எட்டினார். இவர் 7 ஓட்டங்களில் வெளியேறினார். இதைத் தொடர்ந்து அடுத்து வந்த ஸ்டானிக்ஜாய், 4 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

2 விக்கெட்டை மட்டும் இழந்து வலுவாக இருந்த ஆப்கானிஸ்தான், இதன் பின் திடீர் சரிவை சந்தித்தது. அரைச்சதம் அடித்த அகமதி (51) முதலில் ஆட்டமிழந்தார்.

இவரை தொடர்ந்து முகமது நபி (1), அப்சர் (0), நஜிபுல்லா (4), நெய்ப் (0) என, வரிசையாக ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேற, 12 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுகளை இழந்து 97 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை மொத்தமாக தாரை வார்த்து தடுமாறியது.

ஆப்கானிஸ்தான் அணி 27 ஓவரில், 7 விக்கெட்டுக்கு 100 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அந்த சமயம் தவ்லத் (2), ஷென்வாரி (25) களத்தில் இருந்தார்.

பின்னர் அணி 132 ஓட்டங்கள் எடுத்த போது தவ்லத் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் ஹமிட் ஹாசன் உடன் ஜோடிசேர்ந்த ஷென்வாரி பொறுப்புடன் செயற்பட தொடங்கினார்.

96 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அவர் ஆட்டமிழந்தார். அப்போது அணி 192 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டை இழந்திருந்தது. பின்னர் பரபரப்பாக சென்ற ஆட்டத்தில் ஹமிட் ஹாசன் (15), ஷாடர்ன் (12) கடைசி வரை இருந்து அணியை வெற்றி பெறச் செய்தனர்.

இதனால் ஆப்கானிஸ்தான் அணி1 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை ருசித்தது. அணியின் வெற்றிக்காக கடைசி வரை போராடிய ஷென்வாரி ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.(க)

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

ஸ்கொட்லாந்து (50 ஓவர்கள்) 210

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| மாச்சன் | 31 | 28 |
| மஜித் ஹக் | 31 | 51 |
| எவன்ஸ் | 28 | 28 |
| கோயட்சர் | 25 | 41 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

ஆப்கானிஸ்தான் (49.3 ஓவர்கள்) 211/9

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| செனவாரி | 96 | 147 |
| அகமதி | 51 | 51 |
| ஹசன் | 15* | 39 |
| ஸத்ரன் | 12* | 10 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

ஆப்கானிஸ்தான் பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஸத்ரன் | 10 | 1 | 38 | 4 |
| தவ்லத் ஸத்ரன் | 10 | 1 | 29 | 3 |
| ஹசன் | 10 | 1 | 32 | 1 |
| நயீப் | 09 | 0 | 53 | 1 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

ஸ்கொட்லாந்து பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| பெரிங்டன் | 10 | 0 | 40 | 4 |
| டேவி | 10 | 1 | 34 | 2 |
| எவன்ஸ் | 10 | 1 | 30 | 2 |
| ஹக் | 10 | 0 | 45 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனுக்கு ஞானம் வந்துவிட்டது என்றால் அவன் யாருக்கும் தீமை எண்ண மாட்டான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எமது தமிழர் தாயகத்தில் சமய சமத்துவம் அவசியம்

உலகம் முழுவதிலும் சமயங்கள் கொண்டுள்ள ஆதிக்கம் பலமானவை. சமயத்தை அடிப்படையாகக் கொண்ட வகைமைப்படுத்தல்கள் நிறையவே இருந்துள்ளன–இருக்கின்றன.

இனம், மொழி என்பவற்றால் ஏற்பட்ட முரண்பாடுகள் என்பதைவிட, சமயத்தால் ஏற்பட்ட முரண்பாடுகளே ஏராளம்.

சிலுவைப் போரின் தாக்கமும் அதன் பழிவாங்கல் மனநிலைகளும் இன்னமும் உலகெங்கும் விரிந்து கிடப்பது வேதனைக்குரியது.

நமது இலங்கைத் திருநாட்டிலும் பௌத்தம் என்பதன் வெறித்தனமே இனவாதமாக வெளிப்பட்டது.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கூறும் போது கத்தோலிக்க சிங்களவர்களுக்கும் இங்கு இடமில்லை என்பதே பொருள்.

அதேநேரம் கத்தோலிக்க சிங்களவர்கள் தங்கள் தாய்ச் சமயம் பௌத்தம் என்பதை ஒருபோதும் மறப்பதில்லை.

அதன் காரணமாக அவர்களும் பௌத்த சிங்களம் என்பதற்கு மிகுந்த மதிப்புக் கொடுக்கின்றனர்.

அத்தகையதொரு மதிப்பைக் கொடுத்ததன் காரணமாகவே எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்ற பெரும் சிங்கள அரசியல் தலைவர்கள் கத்தோலிக்கம் என்ற தங்களின் குடும்ப, மத மாற்றங்களை முறியடித்துக் கொண்டு தம் தாய்ச்சமயத்திற்கு திரும்பினர்.

எனினும் தாய்ச் சமயத்தை நேசித்தல் அல்லது தாய்ச் சமயத்திற்கு மீளவும் திரும்புதல் என்ற ஏற்பாடுகள் நம் தமிழ் இனத்தில் இல்லாமல் போனமை கவலைக்குரியது.

இருந்தும் தவத்திரு தனிநாயகம் அடிகள் போன்றவர்கள் திருச்சபையோடு இணைந்திருந்து கொண்டு தம் தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தின் பெருமைகளையும் மறக்காமல் வெளிப்படுத்தினார்.

**...அழுதால் உன்னைப் பெறலாமே** என்ற மணிவாசகரின் திருவாசகத்தை தவத்திரு தனிநாயகம் அடிகளார் போற்றிப் புகழ்ந்ததன் காரணமாக அவர் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம்.

இருந்தும் திருவாசகத்தின் மகிமையை எந்தச் சபையும் மறைக்க முடியாது என்பதில் அவர் உறுதியாக நின்றார்.

தந்தை செல்வநாயகம் மத மாற்றத்தால் கிறிஸ்தவராக இருந்த போதிலும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை என்ற பரம்பரையின் அடிநாதம் சைவம் என்பதாக இருந்ததால் தந்தை செல்வநாயகத்தின் இறுதிச்சடங்கின்போது நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க ... என்ற சிவபுராணம் ஒலித்துக் கொண்டே இருந்தது.

ஆக, தென்பகுதியில் எங்ஙனம் சிங்களவர்கள் தங்கள் தாய்ச்சமயமாகிய பௌத்தத்தோடு ஒன்றித்திருக்கிறார்களோ; கிறிஸ்தவத்தில் இருந்தாலும் பௌத்தம் தமது பிராணன் என்று நினைக்கிறாங்களோ! அதுபோல தமிழர் தாயகத்திலும் தமிழர்களின் தாய்ச் சமயமாகிய சைவம் போற்றப்படவும் மதிக்கப்படவும் வேண்டும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக சில இடங்களில் சைவ சமயம் ஓரங்கட்டப்படுவது உணரப்படுகின்றது.

அதிலும் குறிப்பாக இனவிவகாரம் என்ற விடயத்தில் தமிழர்களின் தாய்ச் சமயம் திட்டமிட்டு ஓரங்கட்டப்படுவது தாளாத வேதனைக்குரியது.

எனவே உரிமை என்று நாம் கதைப்பதாக இருந்தால் அதை எங்கும் எதிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழ் இனத்திற்கு சமஉரிமை வேண்டும் என்று கேட்பதில்கூட முதன்மை இடத்தைப் பிடித்து தத்தம் சமயத்தை முன்னுரிமைப்படுத்த நினைப்பது நல்லதல்ல. எனவே இத்தகைய உள்நோக்கங்களை வேரறுக்க தமிழர் தாயகத்தில் சமய சமத்துவம் நூறு வீதம் பேணப்பட வேண்டும்.

# சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட வட்டித் திட்டம்

## மத்திய வங்கி அறிவித்தது

2015 இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 15 சதவீத விசேட வட்டித் திட்டத்தை பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்துவதற்கான செயன்முறைகளை அரசாங்கம் தற்போது நிறைவு செய்துள்ளது. அதன்படி, அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தேவையான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது

திட்டத்தின்படி 2015.01.31அன்று அனைத்து வங்கிகளிலும் மொத்தமாக ரூபா ஒரு மில்லியனுக்கு அதிகப்படாமல் நிலையான ரூபா வைப்புக்களையுடைய 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகள்.

2015.01.31 அன்று அனைத்து வங்கிகளிலும் மொத்தமாக ரூபா ஒரு மில்லியனுக்கு அதிகப்படாமல்நிலையான ரூபா வைப்புக்களையுடைய 60 வயதினையடையும் சிரேஷ்ட பிரசைகள்.

முன்னைய திட்டத்தின் கீழ் 2015.01.16 இற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ரூபா 2.5 மில்லியன் வரையான நிலையான வைப்புக்கள் இத் திட்டத்திற்கு தகுதியானவர்களாக உள்ளனர் முதற் குறிப்பிட்ட இரண்டுக்கும் வருடாந்தம் 15 சதவீத வட்டியும் மற்றையதுக்கு 12 சதவீத வட்டியும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, 2014.12.30திகதியிடப்பட்ட 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரசைகளுக்கான விசேட வட்டித் திட்டம் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இரத்துச்செய்யப்படுவதாகவும் மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. (எ)

# முன்னாள் போராளியை விடுதலை செய்தது நீதிமன்றம்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளி மீது உதவிப் பொலிஸ் அத்தியட்சகரினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது எனக் கூறி யாழ்.மேல் நீதிமன்றம் முன்னாள் போராளி ஒருவரினை விடுதலை செய்துள்ளது. இவ் வழக்கில் திருகோணமலை கிண்ணியா ஆலங்கேணி பிரதேசத்தை சேர்ந்த சுந்தரலிங்கம் கணேசலிங்கம் (வயது26)என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

போரின் இறுதிக்கட்டமான 2009 ஆண்டு மே மாத காலப்பகுதியில் குறித்த இளைஞன் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.பின்னர் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டு புனர்வாழ்வும் அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுமுள்ளார்.

பின்னர்2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதியன்று மீண்டும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். இவர் மீது2008-ம் ஆண்டு இராணுவத்தின் முன்னேறல் நடவடிக்கையின்போது பூநகரியில் வைத்து இராணுவத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றத்தில்2013 ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.இதன்போது குறித்த இளைஞனால் வழங்கப்பட்டதாக கூறப்பட்டு உதவிப்பொலிஸ் அத்தியட்சகரினால் யாழ்.மேல் நீதிமன்றில் வாக்குமூலம் ஒன்றும் சான்றாதாரமாக வழங்கப்பட்டது.இந் நிலையில் குறித்த வழக்கு நடைபெற்று வந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் யாழ்.மேல் நீதிமன்றில் கட்டளைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் குறித்த வாக்கு மூலம் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் பெறப்படவில்லை எனவும் கட்டாயப்படுத்தப்பட்டே பெறப்பட்டுள்ளது எனவும் கூறி குறித்த குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிரகரிப்புச் செய்தார். (எ-4)

# ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வை சிவில் சமூக அமையம் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிவில் சமூக அமையமும் காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்களின் நலன் பேணும் அமைப்பும், காணாமல் போனோர் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் அனைத்தையும் எதிர்காலத்தில் பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளதாக தமிழ் சிவில் சமூக அமையம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 28 பெப்ரவரி- 3 மார்ச் 2015 ஆகிய திகதிகளில் ஆணைக்குழுவின் அமர்வுகள் திருகோணமலையில் நடைபெற ஏற்பாடாகி இருக்கின்ற வேளையில், கடந்த 24 பெப்ரவரி 2015 இவ்விரு அமைப்புகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் சிவில் சமூக அமையங்களின் இணைப் பேச்சாளர்களானகு.குருபரன், எ.ரா/க் ஆகியோர் இணைந்து இணைந்து வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் பல காலம் காலமாக இலங்கை அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் பெறுபேறுகள் பூச்சியமே. இவ்வாணைக் குழுவின் நோக்கங்களும் செயற்பாடுகளும் முன்னைய சந்தர்ப்பங்கள் போன்றே திருப்தி தருவதாக இல்லை.

இவ் வாணைக் குழுவின் விசாரணைப் பரப்பு ஜூலை 2014ல் விஸ்தரிக்கப்பட்டு யுத்தத்தின் போது நிகழ்ந்த ஏனைய குற்றங்கள் தொடர்பாகவும் விசாரிக்குமாறு ஆணைக் குழு அப்போதைய அரசாங்கத்தால் பணிக்கப்பட்டது. இஃது இவ்வாணைக் குழுவின் பணியையும் நோக்கையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

ஜனவரி 9-ம் திகதி 2015-ம் ஆண்டு பதவியேற்ற புதிய அரசாங்கம் காத்திரமான உள்ளக விசாரணையொன்றை உருவாக்கப் போவதாகக் கூறி ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தின் அறிக்கை வெளிவருவதையும் பிற்போடச் சொல்லிக் கோரி வெற்றியும் கண்டுள்ளது.

ஆகவே உள்ளக விசாரணை என்ற பெயரில் நீதி மறுதலிக்கப்படுவதை நாம் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவைப் பகிஷ்கரிப்பதன் மூலம் நாம் இச்செய்தியை உலகிற்குச் சொல்ல விழைகின்றோம் என்றுள்ளது. (எ)

**அமைதியின் சொற்கள்**

**உன்னே பார் அமைதியாய் இரு. உயிர்வாழ்வதன் இனிய ஆனந்தத்தைத் தெரிந்து கொள். உண்மையான ஆழ்ந்த அறிவு நமக்குள்ளேதான் இருக்கின்றது.** ***(பிரேம் ராவத்)***

# ஜனாதிபதி மைத்திரிபால பாகிஸ்தான் செல்வார்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயமாக செல்லவுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட பின்னர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பாகிஸ்தான் பிரதமர் நாவா ஷெரிப் வாழ்த்து தெரிவித்ததுடன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில் அடுத்த மாதம் சீனா செல்லவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அதன்பின் பாகிஸ்தான் செல்வுள்ளமையை இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் எயார் சீப் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி உறுதி செய்துள்ளார்.

தென்னாசிய வலயத்தில் திறந்த பொருளாதார உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள முதல் நாடுகள் வரிசையில் இலங்கை - பாகிஸ்தான் திகழ்வதாக ஜயலத் வீரக்கொடி பாகிஸ்தான் ஊடகங்களிடம் கூறியுள்ளார்.

எனவே பொருளாதாரம் உள்ளிட்ட பல்துறைகளில் இரு நாடுகளும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன். அவரது இந்த விஜயத்தின் போது சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு உள்ளிட்ட 9 உடன்படிக்கைகள் இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

மேலும் மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தானில் தங்கியிருக்கும்போது பிரதமர் நவாஸ் ஷெரிப், இராணுவ தளபதி ரஹீல் ஷெலிப், ஜனாதிபதி மம்நூன் /ஹுசைன் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.(எ-11)

# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

**வெற்றி பெற வழி**

★ பிறருடைய பொருளை பொய் சாட்சியம் கூறி அபகரிப்பவனை சொர்க்கத்தின் வாடையைக்கூட நுகரமுடியாத படி அல்லாஹ் தடுத்து விடுவான்.

★ மனிதர்களைப் பார்த்து வெட்கப் படுவதைவிட, அல்லாஹ்வுக்கு வெட்கப்படுவதே உயர்வானதாகும்.

★ நீங்கள் எவர்களுடன் சேர்ந்து வாழுகின்றீர்களோ. அவர்களுடனே நாளை மறுமையிலும் சேர்ந்து இருப்பீர்கள்.

★ உன் நாவை அடக்கி வைத்துக் கொள். உன் வீட்டை, விருந்தினர் வரும் தலமாக ஆக்கிக் கொள். நீ செய்த பாவங்களை எண்ணி எண்ணி கண்ணீரைச் சிந்து. உன் வாழ்வில் வெற்றி பெறுவாய்.

★ இவ்வுலக வாழ்வில் மதி மயங்காமல்வாழு. அல்லாஹ் உன்னை நேசிப்பான்.

★ எவன் பேசும்போது கோபம் கொண்டானோ. அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்ல.

# ஆய்வுகூட திறப்பு விழா

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரக் கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குள நீரை பயன்படுத்தி 9500 ஏக்கரில் சிறுபோக செய்கை

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி இரணைமடு குளத்தின் தற்போதுள்ள 29 அடி 2 அங்குலம் நீரைக் கொண்டு 9 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை செய்வது என கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

இரணைமடுக்குளத்தின் நீர் அளவைக் கொண்டு 9 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை செய்வது என்றும் இதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி வலது கரை பகுதியிலும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி இடதுகரைப் பகுதியிலும் குளத்து நீரை திறந்து விடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏப்ரல் மாதம் இறுதி நெல் விதைப்பு நாள் எனவும் கூறப்பட்டது.

சிறுபோக நெற்செய்கைக்கான குளத்து நீர் விநியோகம் ஜூலை மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறுமெனவும் சிறுபோக நெற் செய்கைக்காக மார்ச் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் ஓக்ஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

நெற்செய்கைக்கு சேதமேற்படுத்தும் கால்நடையான மாடு ஒன்றைப் பிடிப்பதற்கு 500 ரூபா எனவும் தண்டப் பணமாக 100 ரூபா அறவிடப்படுமெனவும் நாளொன்றிற்கான மாட்டின் பராமரிப்பு செலவு 100 ரூபா எனவும் இத்துடன் சேர்த்து மாட்டின் உரிமையாளர் பயிரழிவு நட்டத்தினை செலுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்திற்கு புறம்பாக வயலுக்கு நீர் பாய்ச்சும் விவசாயி ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடுவது எனவும் சட்டத்திற்கு முரணான விதத்தில் விவசாயி ஒருவர் விதைப்பதில் ஈடுபட்டால் ஏக்கர் ஒன்றிற்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் சிறுபோக நெற் செய்கைக்கான பங்கு அணைத்தல் செயற்பாடுகள் அனைத்தும் முதலாம் திகதிக்கு தொடக்கம் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்படவேண்டும்

நீர் பாயும் வாய்க்கால்களுக்கான துப்புரவு பணிகள் அனைத்தும் மார்ச் மாதம் 10 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட வேண்டும்.

மேலும் இக்கலந்துரையாடலின் போது பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பலர் தமக்கான உள்ளீட்டு பசளைகளை தாம் கடந்த காலத்தில் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாது போனதாகவும் இவ்வருட சிறுபோக நெற்செய்கைக்கு உரிய காலங்களில் உள்ளீட்டு பசளைகளை சம்பந்தப்பட்ட திணைக்களம் வழங்கி உதவ வேண்டுமெனவும் கோரிக்கை விடுததனர். (அ-2-277)

# ஆட்சிமாற்றம் ஊடாக வடமாகாணத்தின் வேலைத்திட்டத்திங்களுக்கு தடைநீக்கம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

கடந்த வருடம் எமது மாகாண சபைக்கு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் பல தடங்கல்கள் இருந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த தடங்கல்கள் நீக்க ப்பட்டுள்ளதாக நம்புகின்றோம் என வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையில் தியாகி அறக்கொடை அமைப்பால் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

வவுனியா வைத்தியசாலைக்கு பல்வேறு அபிவிருத்திகளை செய்துள்ளோம்.

அந்தவகையில் 240 மில்லியன் ரூபாவில் வவுனியா வைத்திய சாலையில் விபத்து விசேட சிகிச்சை நிலையமொன்றினை அமைக்கவுள்ளோம்.

இது மாத்திரமின்றி வட மாகாணத்தில் பல வைத்தியசாலைகளின் தேவைகளும் தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் எமது மாகாணத்தில் நிலத்தடி நீரில் இரசாயன பொருட்களை பயன்படுத்துவதனால் கிருமிகளுக்கு மேலதிகமாக இரசாயன பதார்த்தங்களும் பெருவாரியாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே தற்போது வட மாகாணத்தில் பாரிய குடிநீர் திட்டங்கள் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியாவில் பேராறு குடி நீர்த் திட்டம் கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது. அதில் 60 வீதமான திட்டம் முடிவடைந்துள்ளது.

எனவே வெகு விரைவில் வவுனியா நகரம் மற்றும் அதனை சூழ உள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த திட்டத்திற்கு பின்னால் பல விவசாயிகளின் கண்ணீர் இருந்த போதிலும் தற்போது அது தேவையான திட்டம் என்ற வகையில் விவசாயிகள் அவர்களுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்து தமது விவசாய நிலங்களை தற்போது விட்டுக் கொடுத்துள்ளார்கள்.

அதுபோலவே யாழ்ப்பாணத்திலும் நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதுபோலவே நிலத்தடி நீரை காப்பாற்றுவதற்கு வைத்தியசாலையின் மலக்கழிவுகளை உரிய முறையில் அகற்றவேண்டிய தேவையுள்ளது.

எனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் யுனொப்ஸ் என்ற அமைப்பு 230 மில்லியன் ரூபா செலவில் செயற்படுத்தவுள்ளது.

அத்திட்டம் 2016 ஆம் அண்டு நிறைவடையும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார் (அ-2-250)




## ஆன்மீக முன்னேற்ற பயிற்சிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் ஆன்மீக முன்னேற்ற பயிற்சிகள் மார்ச் மாதம் முதலாம் திகதி காலை 7 மணிக்கு சின்மயா மிஷன் பிரமச்சாரி சிவேந்திர சைதன்யா சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

வயதுவேறுபாட்டின்றி அனைவரும் பங்கு பற்றி பயன்அடையுமாறு குரு பீடாதிபதி ஸ்ரீமத் கணேஷனாந்த மகாதேவ சுவாமி கேட்டுள்ளார். (3)

## செயலமர்வில் 60பேர் பங்கேற்பு

முறையற்ற வெளிநாட்டு பயணத்தை தவிர்த்தல் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு கடந்த 20ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஐ.நா.சபையின் புலம்பெயர்வுக்கான சர்வதேச நிறுவன அதிகாரி இச்செயலமர்வை நடத்தினார். காலை 9 மணி தொடக்கம் மாலை 4மணி வரை நடைபெற்ற இக்கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்குட்பட்ட 4 பிரதேச செயலகங்களிலும் இருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 60 பேர் கலந்து கொண்டனர். (அ-2-254)


# இனந்தெரியாதோர் வீடுமீது தீ வைத்தனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வா நகர், கோவில் வீதியைச்சேர்ந்த கணேஸ்புஸ்பராணி என்பவரது வீடு இனந்தெரியாதோரால் தீயிட்டு கொளுத்தப்பட்டதில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமாகின.

இச்சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதன்போது அவரது 9 வயது மகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வீட்டு உரிமையாளர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து வீட்டினுள் நுழைந்த இருவர் தீயை மூட்டிவிட்டு வெளியேறியுள்ளனர்.



இதன் போது வெளியே விளையாடிக் கொண்டிருந்த அவரது மகள் உயிர் தப்பினார்.

இதன் போது வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள், 10 ஆயிரம் ரூபா பணம், ஆள்அடையாள அட்டை, உடு புடைவை, பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகின.

இதனையடுத்து வீட்டின் உரிமையாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (அ-2-271)

# முன்பள்ளி சிறார்களுக்கு அகமகிழ்வூட்டும் நிகழ்வு

(மல்லாவி)

அக்ராட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் உயிலங்குளம கிராம அபிவிருத்தி சங்கத்தினால், முன்பள்ளி சிறார்களுக்கான சுகாதாரம் தொடர்பான அகமகிழ்வூட்டும் நிகழ்வும், கற்றல் உபகரணப் பொதி வழங்கும் நிகழ்வும் நடைபெற்று வருவதாக மேற்படி சங்கத்தின் தலைவர் அ. ஸ்ரீகாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், உயிலங்குளம் கிராமத்தை சேர்ந்த முன்பள்ளி சிறார்களுக்கான அகமகிழ்வூட்டும் நிகழ்வு இன்று பி.ப. 2 மணி தொடக்கம் பி.ப 5 மணிவரை உயிலங்குளம் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2 மணி தொடக்கம் பி.ப 5 மணிவரை தென்னியன் குளம முன்பள்ளி சிறார்களுக்கும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி) ஆ. சுந்தரமூர்த்தி வளவாளராக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

இதேநிகழ்வு கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை கோட்டை கட்டிய குளம் மற்றும் அம்பலப பெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 120 முன்பள்ளி சிறார்களுக்கும் நிகழ்வு நடைபெற்றதுடன் பங்கு பற்றிய அனைத்து சிறார்களுக்கும் ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப்போரின் போது...

முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாப்பரசர் முதற்கொண்டு உலகத்தலைவர்கள் பலரும் உண்மையைக் கண்டறிய வேண்டும் என தெரிவித்த கருத்துடன் உடன்படுவதாகக் கூறிய மாதுளுவாவே சோபித தேரர், இவ்விடயத்தில் மறைப்பதற்கு ஏதுமில்லை என்றும் தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் உட்பட பாரிய மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதான குற்றச்சாட்டுக்கள் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக இலங்கை மீது சர்வதேச அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் உட்பட உலகத்தலைவர்களும் இறுதிப்போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறிதத உண்மைகள் வெளிக்கொணரப்பட வேணடும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்னவென்று மாதுளுவாவே சோபித தேரரிடம் வினவிய போது, உண்மைகள் கண்டறியப்படுவது நல்ல விடயமே. உண்மைகளைக் கண்டறிவதனூடாக நாம் தெளிவு பெறமுடியும் என்று குறிப்பிட்டார்.

போர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும் என சில தரப்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து வினவிய போது,

போர் வெற்றிக்கான கௌரவம் அவருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், அவர் மட்டுமே போர் வெற்றிக்கு காரணமல்ல. அப்படியென்றால் சரத் பொன்சேகா தேங்காய் உரித்துக்கொண்டிருந்தாரா? போர் வெற்றியைப் பெற்றதற்காக வேறு குற்றங்களை இழைத்திருந்தால் தண்டனை வழங்காது இருக்க முடியாது. போதுமான சாட்சியங்கள் இருக்குமிடத்தில் குற்றச்சாட்டுக்களுக்கு தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கையில்..

தான வாய்ப்புகளுக்காக நாம் எமது பணிகளை ஆற்றவேண்டும்.

இதனைத் தொடர்ந்து உறுதியாக முன்னெடுப்பதற்கு தேவையான வளங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கை வரும்...

வடித்துள்ள நிலையில் ஐ.நா. பேரவையின் உயர்மட்ட பிரதிநிதி இலங்கை வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் யாழ்ப்பா ணத்திற்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இவர் தனது இலங்கை விஜயத்தின்போது அரச தரப்பின் உயர்மட்ட அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (எ-11)

## யாழில் தங்கி....

நின்று அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் டானியல் றெக்ஷிசன் கொலைவழக்கில் கமலிற்கு யாழ்.மாவட்டத்திற்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்ட தடையே இவ்வாறு தளர்த்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷிசன் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கமலேந்திரனை 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி கொழும்பில் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர். அத்துடன் றெக்ஷிசன் மனைவி அனித்தா மற்றும் மேலும் ஒரு இளைஞன் ஆகியோரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கொலை குற்றம் சாட்டப்பட்டிருந்த கமலேந்திரன் யாழ்ப்பாணத்தில் இருக்க முடியாது வாரத்தில் ஒரு தினம் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பமிடவேண்டும். அனுமதியில்லாமல் எக்காரணம் கொண்டும் வெளிநாடு செல்ல முடியாது என்ற நிபந்தனைகள் கொடுக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கரால் கமலேந்திரன் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரி தனது சட்டத்தரணியூடாக விண்ணப்பம் செய்திருந்த நிலையில் கமலேந்திரனுக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி க.சிவபாதசுந்தரம் நேற்றைய தினம் அனுமதியளித்துள்ளார். மேலும் மாதத்தின் முதலாம் மற்றும் இறுதி சனிக்கிழமைகளில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையொப்பமிடவேண்டும் எனவும் நீதிபதி நிபந்தனையளித்தார்.

இக் கொலை தொடர்பிலான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் கடந்த 1 வருட காலத்திற்கும் மேலாக நடை பெற்றுவரும் நிலையில் சந்தேக நபர்களான ஒருவர் தவிர கமலேந்திரன் மற்றும் அனித்தா ஆகியோரை பிணையில் விடுவிக்குமாறு கோரி கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் யாழ். மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்...

பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விஜித ஹேரத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட விஜித ஹேரத், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதன் காரணமாகவே ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அவர்களின் சகாக்களின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது.

இந்த குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த தற்போதைய அரசாங்கம் தவறியுள்ளது.

இதனால், ஜே.வி.பி தேசிய நிறை வேற்றுச் சபையிலும் இவ்வாறு வீதியில் இறங்கியும் ராஜபக்ஷ ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான உடனடியாக சட்டத்தை அமுல்படுத்துமாறு அழுத்தங்களை கொடுக்கும்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் திருடர்களுக்கு தண்டனை வழங்கப்படும் வரை இந்த போராட்டத்தை முன்னெடுப்போம் என்றார். (எ-11)

## இராணுவ...

காப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவை சந்தித்துள்ளார்.


பாதுகாப்பு அமைச்சில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. எதிர்காலத் திட்டங்கள் கடமைகள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. சந்திப்பின் நிறைவில் இராணுவத் தளபதி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கியுள்ளார். (எ-11)

## போர்க்குற்ற விசாரணை..

குற்ற அறிக்கை மார்ச் மாதம் 25 ஆம் திகதி ஐ.நா மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-11)

# நெடியகாடு இளைஞர் வி.கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்றுதொடரில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டு கழகம் மோதியது. இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டன.சிவானந்தா அணி சார்பாக விஜித் ஒரு கோலையும், சென் மேரிஸ் அணி சார்பாக மெரென் ஒரு கோலையும் பெற்று கொண்டனர்,

பின்னர் தண்ட உதை மூலம் 4:3 என்ற கோல் அடிப்படையில் சிவானந்தா அணி வெற்றி பெற்றது.

நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் கட்டைக்காடு குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டு கழகம் மோதியது. இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டன. குறிஞ்சிக்குமரன் அணி சார்பாக குருபரன் ஒரு கோலையும், அல்வாய் நண்பர்கள் அணி சார்பாக வைதீவன் ஒரு கோலையும் பெற்று கொண்டனர்,

பின்னர் தண்ட உதை மூலம் 3:1 என்ற கோல் அடிப்படையில் அல்வாய் நண்பர்கள் அணி வெற்றி பெற்றது.

நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை நியூட்டன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய கட்டைக்காடு சென் செபஸ்தியன் விளையாட்டு கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து கல்வளை விநாயகர் விளையாட்டு கழகம் மோதியது. இரு அணிகளும் எந்தவொரு கோலையும் போடவில்லை.

பின்னர் தண்ட உதை மூலம் 5:4 என்ற கோல் அடிப்படையில் கல்வளை விநாயகர் அணி வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தெரிவானது இன்று நடைபெறவுள்ள போட்டியில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழகமும் நவசக்தி விளையாட்டு கழகத்தை எதிர்த்து நாமகள்கழகமும்மோதவுள்ளன. (க)

# ரகர் வீரரின் மரணம் இயற்கை மரணம் அல்ல

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையின் முன்னணி ரகர் வீரர்களில் ஒருவரான வசீம் தாஜுடீனின் மரணம் இயற்கையான மரணமல்ல என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வசீம் தாஜுடீனின் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாஜுடீனை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோசித கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மரணம் தொடர்பிலான விசாரணைகளை நாரஹேன்பிட்டி பொலிஸாரே மேற்கொண்டிருந்தனர்.

விசாரணைகள் பொலிஸாரிடமிருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் இந்த உத்தரவினை பிறப்பித்திருந் தார்.

2012-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி தாஜுடீன் வாகன விபத்துக்குள்ளாகி வாகனம் வெடித்து உயிரிழந்திருந்தார்.

வாகன விபத்தின் காரணமாகவே தாஜுடீன் உயிரிழந்ததாக சம்பவம் இடம் பெற்ற காலத்தில் ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது.

பிரேதப் பரிசோதனையின் போது தாஜுடீனின் உடலில் அதிகளவு காபன் மொனொக்ஸைட் கலந்திருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக இந்த மரணம் தொடர்பிலான இரசாயன பகுப்பாய்வு அறிக்கை வெளியிடப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் தெளிவான முடிவுகளை வெளியிட முடியாது என கடந்த 12-ம் திகதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# வலி வடக்கில் 1000 ஏக்கர் நிலப்பரப்பை மக்களிடம் கையளிப்பதற்கான கலந்துரையாடல்

மீள்குடியேற்ற அமைச்சர் நேற்று முல்லைத் தீவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டார் இதுதொடர்பாக தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்த அமைச்சர் நேற்று காலை 11.30 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அப்பிரதேசத்தினுடைய பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் பிரதேச செயலக பணியாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினார் இதில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட அமைச்சர் இறுதியாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் நான் யாழ்ப்பாணத்திற்கு சென்று கொண்டிருக்கின்றேன் செல்லும் வழியில் வவுனியாவிலும் மற்றும் உங்களுடைய ஒட்டுசுட்டானிலும் புனருத்தாபனம் தொடர்பாக கேட்டறிந்துகொள்வத்காகவே இங்கு வருகை தந்தேன் எனவும் நான் இன்று யாழ்.நகரிலே வலி வடக்கு கிழக்கு ஆகிய பகுதிகளில் 1000 ஏக்கர் காணிகளை விடுவிப்பது என அரசாங்கம் எனக்குத் தெரிவித்துள்ளனர் இது [illegible]னும் இராணுவத்தினரோடும் கதைத்து அதை எவ்வாறு மக்களுக்கு வழங்குவது என கலந்துரையாடவே வந்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளரொருவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு கிராமத்திலும் பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாது உள்ளது இது தொடர்பாக என கேள்வி எழுப்ப இடையில் குறுக்கிட்ட அமைச்சர் இல்லை இல்லை அதுதான் நான் சொன்னனான் எங்களுடைய அரசாங்கம் 30 நாள்தான் முடிவடைந்துள்ளது 20வருட பிரச்சினையை எனக்கு முப்பது நாளில் தீர்க்கமுடியாது. நான் சொல்வது என்னவென்றால் எப்பிடியும் எனது கடமையை நான் தீர்பேன் கட்டம் கட்டமாகதான் செய்யமுடியும். அரசாங்கம் 1000 ஏக்கர் விடுவித்திருக்கிறது. அதை நான் முதலில் மக்களிடம் ஒப்படைக்கிறேன். திருகோணமலை மற்றும் சம்பூர் ஆகிய பகுதிகளிலும் கொஞ்ச இடம் தொடர்பாக அரசாங்கத்தோடு கலந்தாலோசித்து வருகிறேன். அவ்வாறு கட்டம்கட்டமாக நிச்சயமாக தீர்ப்பேன் என மேலும் தெரிவித்தார். மாலை வேளையில் அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் மக்கள் சந்திப்பொன்றை நிகழ்த்தி மக்களின்குறைநிறைகளை கேட்டறிந்தார். (எ-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்சான், சங்கக்கார அசத்தல் சதம்

# வங்கப் புலியை வென்றது இலங்கைச் சிங்கங்கள்

டில்ஷான் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் துடுப்பாட்டத்தில் மிரட்ட இலங்கை அணி 92 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டுள்ளது.

11 ஆவது உலகக் கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நகரங்களில் இடம்பெற்று வருகின்றது.

அவுஸ்திரேலியாவின் மெல்பேன் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற உலகக் கிண்ண லீக் போட்டியில் குழு "ஏ" யில் இடம் பெற்ற இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் ஒன்றையொன்று சந்தித்தன.

இப் போட்டி இலங்கை அணி அவுஸ்திரேலிய மண்ணில் விளையாடும் 100 ஆவது ஒரு நாள் போட்டியாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கைஅணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 332 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை பதம் பார்த்த இலங்கை அணியின் டில்ஷான் மற்றும் சங்கக்கார ஆகியோர் சதம் பெற்றனர்.



400 ஆவது ஒரு நாள் போட்டியில் விளையாடிய குமார் சங்கக்கார ஆட்டமிழக்காது 76 பந்துகளில் 105 ஓட்டங்களையும் திலகரட்ண டில்ஷான் ஆட்டமிழக்காது 146 பந்துகளில் 161 ஓட்டங்களையும் திரிமன்னே 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்து வீச்சில் ருபெல் குசைன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

333 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆட்டத்தின் முதல் ஓவரின் 2 ஆவது பந்தில் ஓட்டமெதனையும் பெறாது பங்களாதேஷ் அணியின் முதலாவது விக்கெட் பறிக்கப்பட்டது.

இதன் பின்னர் பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் பறிக்கப்பட 47 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்று 92 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.


பங்களாதேஷ் அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஷபிர் ரஹ்மான் 53 ஓட்டங்களையும் ஷகிப் அல் ஹசன் 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் லசித் மலிங்க 3 விக்கெட்டுகளையும் லக்மால் மற்றும் டில்ஷான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பங்களாதேஷ் அணியை 92 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி புள்ளிப்பட்டியலில் 4 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திற்கு முன்றேறியுள்ளது.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் அசத்திய இலங்கை அணியின் டில்ஷான் இப் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

## உலக கிண்ணத்தில் ஆதிக்கம் செலுத்தும் இலங்கை வீரர்கள்




நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடி வரும் வீரர்களில் இலங்கை வீரர்கள் தான் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரராக இருக்கின்றனர்.

11-வது உலகக்கிண்ணத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் விளையாடி வரும் வீரர்களில் இலங்கை வீரர்கள் ஜெயவர்த்தனே (1075), சங்கக்கார (1037) உலகக் கிண்ணத் தொடரில் ஆயிரம் ஓட்டங்களை குவித்து முதல் இரு இடங்களை பெற்றுள்ளனர்.

மற்றொரு இலங்கை வீரரான டில்ஷான் (741) 5-வது இடத்தில் இருக்கிறார். கிறிஸ்கெய்ல் (859) 3-வது இடத்திலும், டிவில்லியர்ஸ் (780) 4-வது இடத்திலும் இருக்கின்றனர்.

மேலும் இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் சங்கக்கார 37 வயதான அவர் நேற்று தனது 400-வது ஒருநாள் போட்டியில் விளையாடினார். வங்காளதேசத்துக்கு எதிரான நேற்றைய போட்டியில் ஆடியதன் மூலம் அவர் புதிய மைல் கல்லை தொட்டார். 400-வது போட்டியில் விளையாடும் 4-வது வீரர் சங்கக்கார ஆவார். 3-வது இலங்கை வீரர் என்ற பெருமையையும் பெற்றார். (ந)

**பணியாளர்கள் தேவை**

விற்பனையாளர்கள் பதவிக்கு பணியாளர்கள் தேவை.

- தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்படும்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
- இடம்:-யாழ்ப்பாணம், கிளிநொச்சி.

தொ.பே:-0778473222 (9829)

**உடனடி வேலைவாய்ப்புக்கள்**

சர்வதேச ரீதியில் 30 ஆண்டுகளாக இயங்கிவரும் எமது Canadian நிறுவனத்துக்கு புதிய கிளைகள் ஆரம்பமாக இருப்பதால் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்) போன்ற இடங்களுக்கு பணியாற்றுவதற்கு பதவி வெற்றிடங்கள் உள்ளன.

O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்.

பதவிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. 0779660885 (9557)

T.P: 0771908997, 0770771377 No.28, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**V2 Travels and Tours**

அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்
குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்

அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online, விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்

கட்டார், மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

யாழ்ப்பாணம் 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257

நெல்லியடி நூடக்காட்டுச்சந்தி 0776699892

வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960

- மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
- எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ். பல்கலைக் கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்).

யாழ், வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

DELF A1 International Diploma : வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.

பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3500 ஏனையோருக்கு 9000

உடன் அழைத்து புதிய வகுப்புகளுக்கு பதிவுசெய்யுங்கள்...

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி ரோட் → நக்கா ரோட் → AF

FALC **FRENCH LANGUAGE CENTRE**
**REGISTERED FRENCH CENTRE.**

**FRENCH CLASSES**



Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்..

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

இதுவரையில் எமது ஆசிரியரிடம் 895 பேர் கற்று சென்றுள்ளனர்

Register now : 0779 789 456 / 021 320 2973

ஆரம்பம்: 28.02.15 @2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)

ஆரம்பம்: 28.02.15 @3.30pm No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.

சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

**உடனடி வேலைவாய்ப்பு**

(Management Trainees) 2015

*STUDY & WORK IN NORTH PROVINCIAL* Granton

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சிக்கு யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ வவுனியா ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும் (Fixed income packge 12000/-)
- பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் EPF/ETF அடங்கலாக ரூபா 60000/- மேல் பெறலாம்.
- தொழில் நிரந்தரமாக்கப்படும்
- பயிற்சி காலம் 3-6 மாதங்கள்

**GRANTON INTERNATIONAL (PVT) L.T.D**

*235, 3rd Cross, Hospital Road Jaffna, Contact:-0774458134* (9830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.